

# 2024

# ප්‍රගති වාර්තාව

# முன்னேற்ற அறிக்கை

# Progress Report

වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමුපකාර සංවර්ධන අමාත්‍යාංශය

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development

# 2024–முன்னேற்ற அறிக்கை

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும்
கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

# அழகான வாழ்வு, வளமான நாடு...



கோடிக்கணக்கான மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டுதலான "வளமான நாடு - அழகான வாழ்வு" என்ற நமது அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தைச் செயல்படுத்துவதிலே வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சராக இந்த செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதும், நுகர்வோருக்கு பாதுகாப்பான உணவை வழங்குவதும் எனது அமைச்சின் பொறுப்பாகும். சமீபத்திய அரிசி நெருக்கடி, தேங்காய் பற்றாக்குறை மற்றும் நாட்டில் போதுமான உப்பு இருப்பு இல்லாதமை ஆகியவை நுகர்வோருக்கு சில சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன. முந்தைய அரசாங்கங்கள் துல்லியமான தரவுகளின் அடிப்படையில் சந்தையை ஒழுங்குபடுத்தத் தவறியதால், எங்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திற்குள் முதல் அரிசி விநியோகம் தடைப்பட நேரிட்ட போதிலும், எனது அமைச்சுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களான லங்கா சதோசா மற்றும் அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம் போன்றவை அரிசியை இறக்குமதி செய்து சந்தையில் ஏற்பட்ட குழப்பத்தை நிர்வகிக்க முடிந்தது.

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, அரசாங்கம் பாதுகாப்பான இருப்புகளைப் பராமரிப்பது அவசியமாகும். இல்லையெனில், தற்போது நடப்பது போல, ஒரு சில பெரிய அளவிலான சில்லறை விற்பனையாளர்கள் நுகர்வோரைச் சுற்றிவளைப்பார்கள். அதனால்தான் எங்கள் அமைச்சும் நெல் சந்தைப்படுத்தல் சபையும்இணைந்து2025 ஆம் ஆண்டு பெரும் போகத்திலிருந்து பாதுகாப்பான நெல் இருப்பைப் பேணத் தீர்மானித்துள்ளன.

நாட்டில் பயிரிடக்கூடிய அனைத்து விவசாய பயிர்களையும் பயிரிடுவது எங்கள் அரசாங்கத்தின் கொள்கையாகும். உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் அண்ணளவாக 1,600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகிறது. எதிர்வரும் ஆண்டில் இதில் 40% - 50% வரை சேமிக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்2025ஆம் ஆண்டில் தொடங்கப்படும் 1000 உற்பத்திகளின் கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டம் இதற்கு முக்கியமாக பங்களிக்கும். எனது அமைச்சின் கீழ் இயங்கும் அரசாங்க வர்த்தகத் திணைக்களத்தின் ஊடாக, பெறுமதி சேர் பொருட்களை சர்வதேச சந்தைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. லங்கா சதோச விற்பனை வலையமைப்பை விரிவுபடுத்துவதோடு, கூட்டுறவு மொத்த விற்பனை வர்த்தகக் கூட்டுத்தாபனம் மீண்டும் செயல்படுத்தப்படும், மேலும் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் பல மொத்த விற்பனை வர்த்தக நிலையங்கள் நிறுவப்படும். சந்தையில் தரமான பொருட்களின் புழக்கத்தை சீராக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை பலப்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் தேவையான வழிமுறைகள் வலுப்படுத்தப்படுகின்றன. ஒரு அரசாங்கமாக, நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவும், ஊழல் மற்றும் அநீதியை ஒழிக்கவும், நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட மறுமலர்ச்சி சகாப்தத்தை உருவாக்கவும் நாங்கள் பாடுபடுகிறோம். நவீன உலகில், எல்லா வகையிலும் வளமான நாட்டில், உங்களுக்கு நவீன வாழ்க்கையை வழங்க நாங்கள் எடுக்கும் இந்த முயற்சிக்கு அனைவரினதும் பங்களிப்புக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

**வசந்த சமரசிங்ஹ (பா.உ.)**
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

# பெருமைமிக்க தேசம், உலகை வெல்லும் நாளை...



ஒரு நாட்டின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் மிக முக்கியமான காரணி அதன் அரசியல் கட்டமைப்பால் கட்டுயெழுப்பப்பட்ட செயற்பாட்டு பொறிமுறையாகும். 2024நவம்பர் 22 ஆம் திகதி நாங்கள் நாட்டைப் பொறுப்பேற்றகாலத்தில், நாட்டின் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக கடுமையான நெருக்கடி இருந்தது. நாட்டு மக்களின் சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் கல்வி அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மாறும் செயல்முறைகள் என்பதுடன் அவை அனைத்தும் கடுமையான அளவிற்கு மோசமடைந்து காணப்பட்டன. ஒரு அமைச்சாக, மிகக் குறுகிய காலத்தில் குறித்த துறை தொடர்பான பிரச்சினைகளை இனங்காணவும், சரியான மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதற்குத் தேவையான வழிகளைக் கண்டறியவும், நாட்டிற்கு செழிப்பைக் கொண்டுவரும் ஒரு போக்கைத் திட்டமிடவும் நாம் கூட்டாக ஒரு வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு அமைச்சாக, பொதுமக்களின் உணவு விநியோகத்தில் உள்ள பாதுகாப்பின்மையிலிருந்து விடுபடவும், அவர்களுக்கு ஆரோக்கியமான உணவு கிடைப்பதை உறுதி செய்யவும் குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால திட்டங்களுக்குள் செயல்பட மிகுந்த உறுதியுடனும் நம்பிக்கையுடனும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எதிர்கால உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, நாட்டின் வளத்தைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டு மூடியிருந்த நெல் களஞ்சியங்கள் மற்றும் ஆலைகள் புதுப்பிக்கப்பட்டு, விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லைப் பாதுகாப்பாக சேமித்து வைப்பதற்காக மீண்டும் செயல்படுத்தப்பட்டன.

சதோசா, கூட்டுறவு சங்கங்கள், வர்த்தக நிலையங்கள், நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் நாடு முழுவதும் வர்த்தகம் தொடர்பான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான திட்டங்கள் மற்றும் உயர் மட்ட முகாமையின் வளர்ச்சிக்கு பங்களிப்பை வழங்கி நாடு முழுவதும் உணவுப் பாதுகாப்பு முகாமை முறையொன்றைத் திட்டமிட்டு வருகிறோம். நீண்ட காலமாக சகல துறைகளின் திறமையின்மையால் எழுந்துள்ள மிகப்பெரிய நெருக்கடியைத் தீர்க்க, எங்கள் அமைச்சு ஏனைய அமைச்சுகளுடன் இணைந்து, ஒரு மாபெரும் சக்தியாக மாறத் தயாராக உள்ளது.

பொது வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளும் வர்த்தக மற்றும் வணிகத் துறைகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளதுடன், மிகக் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கூட்டுறவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் பொதுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான தெளிவான பார்வையை செயற்படுத்துவதில் ஒத்துழைப்பை வழங்கும்

பாரம்பரிய ஏற்றுமதிகளை நவீனமயமாக்கவும், மறைக்கப்பட்ட ஆனால் அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வெளிக்கொணரவும் ஊக்குவிக்கவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். தரையில் வளரும் ஒவ்வொரு தாவரத்தையும் பொருளாதார சொத்தாக மாற்றக்கூடிய மக்களைக் கொண்ட நாடு இலங்கை என்பதை அங்கீகரித்து, புதிய உற்பத்திகளில் நாட்டை மையப்படுத்த நாங்கள் திட்டங்களை வகுத்து வருகிறோம். இறக்குமதி மற்றும் ஏற்றுமதியைப் பாதிக்கும் ஒழுங்குவிதிகளை நவீனமயமாக்குவதன் மூலம் ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் எதிர்கால வெளிநாட்டு சந்தைகளை வெல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மகிழ்ச்சி, அமைதி மற்றும் வெற்றி நிறைந்த மக்களாகவும், பெருமைமிக்க தேசமாகவும் உலகை வெல்லும் ஒரு உடைக்க முடியாத சக்தியாக மாறுவதற்கான அனைத்து அம்சங்களையும் ஒரு அரசாங்கமாகவலுப்படுத்துவோம்.

எனது தாய்நாடான இலங்கை தேசத்திற்கு வளமான சகாப்தம் அமைய எனதுநல்வாழ்த்துக்கள்....

**ஆர்.எம்.ஜயவர்தன (பா.உ.)**
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர்

# உணவுப் பாதுகாப்புள்ள நாடு, அழகான வாழ்வு...



உணவுப் பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்புவதில்கூட்டுறவுத் துறைப் பிரதி அமைச்சர் என்ற முறையில்,எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை ஒரு விவசாய-தொழில்துறை நாடாக இருந்தாலும், பல உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஆண்டுதோறும் அதிக அளவு அந்நியச் செலாவணியைச் செலவிட வேண்டியுள்ளது. திறந்த பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், உள்ளூர் விவசாயிகள் விவசாயத்திலிருந்து விலகிச் சென்றனர், மேலும் கிராமப்புற பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பைச் செய்த கூட்டுறவுப் பொருளாதாரத்தின் சரிவினால்நாட்டில் வறுமை அதிகரித்து, இன்று, 22 மில்லியன் மக்களில் ஏறத்தாழ26% மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். இத்தகைய சூழலில், நமது புதிய அரசாங்கம் கூட்டுறவுகளை மீளக் கட்டியெழுப்பவும், விவசாய நிலங்களுக்கு புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு வரவும், நாட்டின் விவசாய உற்பத்தியை மேம்படுத்தவும் பாடுபடுகிறது.

2025ஆம் ஆண்டு ஆரம்பமாகின்ற நாடு தழுவிய உற்பத்திக் கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக முதல் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட 10 விவசாயப் பயிர்கள் மற்றும் 5 சிறு ஏற்றுமதிப் பயிர்களை மையமாகக் கொண்டு 1,000 உற்பத்திக் கூட்டுறவுகளை நிறுவுவதற்கான ஆரம்பப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், விவசாயிகளை ஒழுங்கமைத்தல், உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் அவர்களின் விவசாயப் பொருட்களுக்கு நியாயமான விலையை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, விவசாய அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் மொத்த கொள்வனவாளர்களிடையே எழுத்துப்பூர்வ இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது. உற்பத்திக் கூட்டுறவின் ஊடாக விவசாயிகளுக்குத் தேவையான நிதி வசதிகள், விதைகள், உரங்கள் மற்றும் தொழில்நுட்பம் என்பன வழங்கப்படுவதுடன் உரியஉற்பத்திகள் சேகரிக்கப்பட்டு, தரமான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு, கொள்வனவாளர்களின் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன.

நாட்டில் தற்போது 30%-40%ஆக இருக்கும் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் கட்டுப்படுத்துவதும், நுகர்வோருக்குப் பாதுகாப்பான உணவை வழங்குவதும் நமது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சந்தை இடைத்தரகர்களைக் குறைப்பதன் மூலம், நுகர்வோர் நியாயமான விலையில் பொருட்களைப் பெறும் திறனை உறுதி செய்ய வேண்டும். சந்தை ஏகாதிபத்தியக்குழுக்களைக் கட்டுப்படுத்த நாட்டில் பாதுகாப்பான இருப்புகளைப் பராமரிக்கும் பொறுப்பு நமது அரசாங்கத்திற்கு உள்ளது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதைப் படிப்படியாகக் குறைக்கவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் சகல விதத்திலும் வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான இந்தப் பயணத்தில், தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடன நோக்கங்களை நிறைவேற்றுவதன் அடிப்படையில்எங்கள் அமைச்சு பங்களிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

அதன்படி, "உணவுப் பாதுகாப்பான நாடு - அழகான வாழ்க்கை"யை உருவாக்க நாங்கள் மேற்கொள்ளும் இந்த முயற்சியில் பங்களிக்க சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

**உபாலி சமரசிங்ஹ (பா.உ.)**
கூட்டுறவுப் பிரதி அமைச்சர்

## அமைச்சுச் செயலாளரிடமிருந்தான செய்தி...



அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உயர்ந்தபட்ச பங்களிப்புகளைச் செய்வதே வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் முதன்மைப் பணியாகும். அதன் பிரகாரம், வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் துறைகளுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குவதன் ஊடாக உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சேவைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை முறையாக செயற்படுத்துவதை உறுதி செய்வதற்கும், வர்த்தக மற்றும் நுகர்வோர் சமூகத்திற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும், அதன் மூலம் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஏற்கனவே பல தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வர்த்தக மற்றும் வாணிபத் துறைகளின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச தரங்களுக்கு இணங்க தேசிய வர்த்தகக் கொள்கையொன்றை தாபித்தல், செயற்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஊடாக நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த சந்தை அணுகலை உருவாக்குவதே எமது குறிக்கோளாகும்.

இந்த இலக்கைக் கவனத்திற் கொண்டு, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆகிய துறைகளுக்குரிய நிறுவனங்களின் வலையமைப்பை முறையாக செயற்படுத்துவதன் மூலம், நியாயமான விலையில் நுகர்வோருக்கு தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு கடந்த ஆண்டில் அதிகபட்ச முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், தீவுப் பொருளாதாரமொன்றின் பாதிப்பு மற்றும் பாதகமான காலநிலை நிலைமைகள் மற்றும் உலகளாவிய சந்தை நடவடிக்கைகளில் நிலையான சந்தை ஏற்றத்தாழ்வுகள் காரணமாக, எழும் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வுகளுக்கு நிலையான தீர்வுகளைக் கண்டறிய வேண்டிய அவசியம் உள்ளதுடன், இதற்காக புதிய உத்திகள் பின்பற்றப்பட வேண்டியும் உள்ளது. எனவே, 2025 ஆம் ஆண்டை ஒரு புதிய ஆரம்பத்தைக் குறிக்கும் ஆண்டாக அறிமுகப்படுத்தலாம். இங்கு ஐந்தாண்டு மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரித்து, அதற்கிணங்க வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு ஆகிய துறைகளின் கீழ் மிகவும் வினைத்தினான மற்றும் பயனுறுதியுள்ள சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அமைச்சரவையினால் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், இது இணை அமைச்சுகளான வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு என்பவற்றின் கீழாக செயற்படுத்தப்படுகிறது.

சர்வதேச வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், சர்வதேச வர்த்தக கண்காட்சிகள், வணிக சமூகத்தின் பங்கேற்புடன் கூட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றே சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் கூட்டு ஆணைக்குழுக்கள் மூலம் ஏற்றுமதிக்கான புதிய சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதன் ஊடாக அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிக்கும் செயல்முறையை மேலும் வலுவாக செயற்படுத்தும் பொருட்டு, வர்த்தகத் திணைக்களத்தை ஒரு புதிய அணுகுமுறையின் ஊடாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்த நோக்கத்தை அடைய, சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஏற்றுமதியாளர்களாக மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளைத் திட்டமிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக உற்பத்திகளை இலக்காகக் கொண்டு 1,000 கூட்டுறவுச் சங்கங்களை தாபிப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தொடங்குவதன் மூலம். இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம், நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் அளவீட்டு, அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, மேலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதில் தனியார் துறையுடன் போட்டியிடும் வகையில் லக் சதோச மற்றும் கூட்டுறவு வர்த்தக வலையமைப்பை மேலும் நவீனப்படுத்தவும், நேரடி இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய கூட்டுறவு மொத்த விற்பனை வர்த்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரசு வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தவும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இந்தச் சூழலில், நாட்டில் தற்போதுள்ள அரசுக்குச் சொந்தமான உணவு விநியோகச் சங்கிலியை வலுப்படுத்த, கூட்டுறவு மொத்த விற்பனை வர்த்தகக் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைத்து மீண்டும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இந்த அமைச்சின் பணிகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு தொடர்ந்து அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கும் கௌரவ அமைச்சர் அவர்களுக்கும், இரண்டு பிரதி அமைச்சர்களுக்கும், நோக்கங்களை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அமைச்சின் பணியாளர்கள் மற்றும் இணைந்த நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட சகல பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே. ஏ. விமலேந்திரராஜா**
செயலாளர்

# பொருளடக்கம்

01. முதலாம் அத்தியாயம் - தொலைநோக்கு, செயல்நோக்கு,நோக்கங்கள்மற்றும்செயற்பாடுகள் ............ 1

01. இரண்டாம் அத்தியாயம் - முக்கிய விடயங்கள் ........................................................................ 7

02. மூன்றாம் அத்தியாயம் -2024– முன்னேற்றம் ........................................................................ 13

04. நான்காம் அத்தியாயம் -2025– எதிர்காலத் திட்டங்கள் ............................................................ 51

# அட்டவணை ஒழுங்குகள்


அட்டவணை இல. 2.1 அத்தியாவசிய உணவுப் பொருட்களை நியாய விலையில் நுகர்வோருக்கு வழங்குதற்காக விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை மற்றும் மொத்த விலைகள் ... 9
அட்டவணை இல 2.2 கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட களஞ்சியசாலைகள் ........ 11
அட்டவணை இல 3.1 நிதியியல் முன்னேற்றம் ........ 15
அட்டவணை இல 3.2 விசேட விசாரணைகளும் ஆரம்ப விசாரணைகளும் ........ 16
அட்டவணை இல 3.3 வெளிநாடுகளில் வர்த்தக அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.. 26
அட்டவணை இல 3.4 மூலச் சான்றிதழ்களை வெளியிடுதல் மற்றும் பிற ஆதரவுச் சான்றிதழ்களை வெளியிடும் சேவைகள் ........ 28
அட்டவணை இல 3.5 வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் ........ 29
அட்டவணை இல 3.6 செயற்பாட்டு நடவடிக்கையில் முன்னேற்றம் ........ 30
அட்டவணை இல 3.7 2024புலமைப்பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல் ........ 31
அட்டவணை இல 3.8 மகபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல் ........ 31
அட்டவணை இல 3.9 பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் மஹாபொல புலமைப்பரிசில் பெறுநர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான ஒப்பீடு ........ 32
அட்டவணை இல 3.10 இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் தராதர அங்கீகாரம் வழங்கல் ........ 32
அட்டவணை இல3.11 இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 2024 இல் வழங்கிய தராதர அங்கீகாரங்கள் ........ 33
அட்டவணை இல 3.12 உள்ளூரில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம் ........ 35
அட்டவணை இல 3.13 அமுக்கம் மற்றும் கன அளவு குறித்து ஆய்வுகூடங்களால் பெறப்பட்ட தராதர அங்கீகாரங்களைப் புதுப்பித்துப்பேணுதல்........ 37
அட்டவணை இல 3.14 பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களில் நிதி வளர்ச்சி ........ 38
அட்டவணை இல 3.15 பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிகளால் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம் ........ 39
அட்டவணை இல 3.16 பௌதீக வளர்ச்சி ........ 40
அட்டவணை இல 3.17 கைத்தொழில் வடிவமைப்புகள் ........ 41
அட்டவணை இல 3.18 வர்த்தக சின்னங்கள் ........ 41
அட்டவணை இல 3.19 நுகர்வோர் விவகார அதிகாரசபை செயற்பாடுகளின் முன்னேற்றம் ........ 42
அட்டவணை இல 3.20 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சங்கப் பிரிவின் முன்னேற்றம் 44
அட்டவணை இல 3.21 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்டப் பிரிவின் முன்னேற்றம் ........ 44
அட்டவணை இல 3.22 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கிப் பிரிவின் முன்னேற்றம் ........ 45
அட்டவணை இல 3.23 கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான முன்னேற்றம் 45
அட்டவணை இல 3.24 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் ........ 45
அட்டவணை இல 3.25 தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ........ 47
அட்டவணை இல 3.26 கம்பனிகளின் பெயர்களை அங்கீகரித்தல் ........ 49
அட்டவணை இல 3.27 கலைக்கப்பட்ட மற்றும் ரத்துச் செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை ........ 49
அட்டவணை இல 3.28 பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் ........ 50

# முதலாம் அத்தியாயம்

# தொலைநோக்கு,
# செயல்நோக்கு, நோக்கங்கள்
# மற்றும் செயற்பாடுகள்

# 01.தொலைநோக்கு, செயல்நோக்கு, நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

## 1.1. தொலைநோக்கு

"நிலைபேறான அபிவிருத்தியடைந்த இலங்கை"

## 1.2. செயல்நோக்கு

வர்த்தகப் பிரிவின் தலைமையில் சேவை வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் ஏனைய சேவை வழங்குனர்களினதும் நுகர்வோரினதும் சமத்துவத்தையும் வர்த்தக உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்ற தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்றவாறான தேசிய வர்த்தக கொள்கையொன்றை தாபித்தல், பேணுதல் மற்றும் இலங்கையின் சர்வதேச வர்த்தக சம்பந்தத்தை அதிகரித்துக் கொள்வதற்கு இருதரப்புஇ பிராந்திய மற்றும் பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் புதிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும், இலங்கையரின் அன்றாட நுகர்வு பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உயர்த்துவதன் மூலம் உயர் வாழ்க்கைத்தர நிலமையை பேணுவதற்கும் பங்களிப்பு வழங்குதல்

## 1.3. நோக்கங்கள்

i. தேசிய வர்த்தகக் கொள்கை மூலம் தேசிய உற்பத்தியாளர்களதும் நுகர்வோரினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் சந்தையைக் கையாளும் நிர்வாகத்திற்கான கருவியாக தீர்வை வரிக் கொள்கையை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான வரிச் சலுகைகளை வழங்குதல் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

ii. சந்தையில் பொருட்களின் விலை அசாதாரணமான முறையில் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல் தொடரை அதிகரிப்பதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கைச் செலவை குறைந்த மட்டத்தில் பேணிச் செல்லுதல்.

iii. திறந்த போட்டித் தன்மையான சந்தைச் சூழலில் இலங்கை சதொச நிறுவனம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் போன்ற அரச நிறுவனங்கள் ஊடாக நுகர்வோருக்கு சலுகை ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்.

iv. வர்த்தகப் பிரஜைகளைப் போன்றே நுகர்வோரினதும் பயனுக்காக அளவையியல் அலகுகள் தரங்களை உரியவாறு நடைமுறைப்படுத்துவதை சான்றுப்படுத்தல்.

v. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாதுகாப்பு இருப்பை (Buffer Stock) பேணிச் செல்வதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைப் போன்றே உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல்.

vi. நுகர்வோர் பாதுகாப்பிற்குரிய சட்ட நடவடிக்கைகள் பொருட்டு நுகர்வோர் சேவை அதிகாரசபைக்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்.

vii. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஏற்புடைய தரவுத் தொகுதியொன்றைப் பேணுதல், அத்தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தல் மற்றும் அத்தரவுகளை வெளிவாரித் தகவல்களை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தும் பொறிமுறையொன்றைத் தயாரித்தல்.

viii. உள்ளூர் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் உரிய தரங்களைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு வழிகாட்டுதல்.

ix. உயர் கல்வியில் மாணவ மாணவிகளை ஊக்குவிப்பதற்கு ஏற்புடைய நலன்புரி செயற்பாடுகளை நடத்திச் செல்வதற்குப் பங்களிப்பு வழங்குதல்.

x. தேசிய புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்.

xi. தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப நடத்திச் செல்லப்படும் இணக்க மதிப்பீட்டுக்கான அங்கீகாரச் சேவையை சான்றுப்படுத்துவதற்குரிய வழிகாட்டல்.

xii. இலங்கை பொருளாதாரம் மற்றும் வர்த்தக நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச சந்தை வாய்ப்பின் பொருட்டு ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான நிறுவன பின்னணியை அமைத்து கொடுத்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஊக்குவித்தல்.

xiii. இயைபுடைய இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு ரீதியாக நாடுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்யும்போது வசதிகளைத் திட்டமி;டல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

xiv. இலங்கையில் எற்றுமதிக்காக தெரிவு செய்யப்பட்ட அடிப்படை முறை (GSP), பரஸ்பரமற்ற வர்த்தக உடன்படிக்கை(NMTR), சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கை (RTA) போன்றவற்றின் சட்டரீதியான ஒருங்கிணைத்தலுக்கு தேவையான வழிக்காட்டல்

## 1.4. செயற்பாடுகள்

I. அரசினால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகள் மீது அமைக்கப்பட்ட வர்த்தக விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகளை உருவாக்குதல்.

II. அமைச்சின் கீழ்; இயங்குகின்ற திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க நிறுவனங்களின் விடயதானங்கள் மற்றும் பணிகள், அவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்ட உருவாக்கம் என்பவற்றை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

III. தேசிய வர்த்தகக் கொள்கையை தயாரித்தல் மற்றும் அக்கொள்கையை மேற்கொள்வதற்கு தேவையான ஒருங்கிணைப்பு செயற்பாட்டை நடைமுறைபடுத்தல்.

IV. நுகர்வோரைப் பாதுகாப்பதற்குத் தேவையான சந்தைப் போட்டித் தன்மையை ஏற்படுத்தல், சந்தை மேற்பார்வை, சுற்றிவளைப்பு மற்றும் வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தல்;.

V. உள்நாட்டுச் சந்தையில் ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்தும் இடையீட்டாளராகச் செயற்படல்.

VI. உலக வர்த்தக சந்தையினுள் புதிய ஏற்றுமதிச் சந்தர்ப்பங்களை இனங்காணுதல், அதே போல் புதிதாக இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்வதற்காக நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் தேவையான வசதிகளை திட்டமிடல்

VII. இலங்கையில் புலமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் புலமைச் சொத்து முறையொன்றை நிறுவுதல்.

VIII. கம்பனிகள், வணிகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்குதல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்.

## 1.5. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

i. வர்த்தகத் திணைக்களம்
ii. வரையறுக்கப்பட்டலங்கா சதொச நிறுவனம்
iii. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்
iv. லலித் அதுலத்முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
v. இலங்கை ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை
vi. அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்
vii. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள்
viii. இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்
ix. நுகர்வோர் விவகார அதிகாரசபை
x. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
xi. கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு
xii. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்
xiii. இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம்
xiv. உணவு ஆணையாளர் திணைக்களம்
xv. கம்பனிகள் பதிவாளர் நாயகம் திணைக்களம்

# இரண்டாம் அத்தியாயம்

## முக்கிய விடயங்கள்

## 02. முக்கிய விடயங்கள்

2.1 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பற்றாக்குறையின்றி நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு தொடர்ந்து ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டதுடன், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைக் கட்டுப்படுத்துதற்காக பொருட்களின் தரத்தைப் பரிசீலித்தல், நுகர்வோருக்கு மலிவு விலையில் அவற்றை வழங்குதல், உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, தேவைப்படும்போது அதிகபட்ச சில்லறை விலையையும் அதிகபட்ச மொத்த விலையையும் நிர்ணயிப்பதன் மூலமும், அவ்வப்போது அந்த விலைகளை நீக்குவதன் மூலமும் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதிகபட்ச சில்லறை/மொத்த விலைகள் நிர்ணயம் குறித்த தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை இல 2.1அத்தியாவசிய உணவுப் பொருட்களை நியாய விலையில் நுகர்வோருக்கு வழங்குதற்காக விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை மற்றும் மொத்த விலைகள்*

| தொடரில | விடயம் | வகைப்படுத்தல் | வர்த்தமானி இல. & திகதி | அதிகபட்ச விலை | | ஏனைய |
|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்த விலை(ரூ.) | சில்லறை விலை(ரூ.) | |
| 1 | அரிசி(உள்ளூர்) | கிரி சம்பா | 2414/02 2024.12.09 | 255.00 | 260.00 | |
| | | சம்பா | | 235.00 | 240.00 | |
| | | நாடு | | 225.00 | 230.00 | |
| | | பச்சை | | 215.00 | 220.00 | |
| 2 | அரிசி(இறக்குமதி) | பச்சை | 2414/04 2024.12.09 | - | 210.00 | |
| | | நாடு | | - | 220.00 | |
| | | சம்பா | | - | 230.00 | |
| 3 | ரின் மீன் | டுனா நிகர நிறை 425 கி மற்றும் நீர் அற்ற நிறை 280 கி. | 2416/29 2024.12.27 | | 380.00 | |
| | | **மக்கரல்** நிகர நிறை 155கி மற்றும் நீர் அற்ற நிறை 105கி. | | | 180.00 | |
| | | **மக்கரல்** நிகர நிறை 425 கி மற்றும் நீர் அற்ற நிறை 280 கி. | | | 420.00 | |
| | | **ஜக் மக்கரல் (லின்னா)** நிகர நிறை 425 கி மற்றும் நீர் அற்ற நிறை 280 கி | | | 560.00 | |

ஆதாரம்; வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, வர்த்தக, ஆராய்ச்சிப் பிரிவு

2.2 2024ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஏற்பட்ட அரிசி பற்றாக்குறையையும், மிக அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வதையும் தடுக்கும் வகையில், அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெறாமல் தனியார் இறக்குமதியாளர்களால் அரிசியை இறக்குமதி செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்டது, அதன்படி, 2024.12.02ஆம் திகதி முதல் 2024.12.31ஆம் திகதி வரை மொத்தம் 83,215 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

2.3 உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சதோச நிறுவனம ஆகியவை, அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ், 70,000 மெட்ரிக் தொன் நாடு அரிசி இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன்,2024.12.31ஆம் திகதியளவில், இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்தால் மொத்தம் 780 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு, லங்கா சதோசா, கூட்டுறவு மற்றும் பல்பொருள் அங்காடி விற்பனை வலையமைப்புகள் மூலம் அவை விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும்25,200 மெட்ரிக் தொன் அரிசிக்கு கட்டளைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.4 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில்உள்ளூர் சந்தையில் ஏற்பட்ட அரிசி மற்றும் தேங்காய் பற்றாக்குறைக்கு தீர்வாக, லங்கா சதோச விற்பனை நிலைய வலையமைப்பு, இந்த முக்கிய பொருட்களை நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கான சிறப்பு திட்டத்தை செயல்படுத்தியது. அதன்படி, லங்கா சதோச நிறுவனத்தின் ஊடாக 2024 டிசம்பர் முதல் 2025 ஜனவரி 15ஆம் திகதி வரை சுமார் 4.5 மில்லியன் கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதில் ஏறத்தாழ1.5 மில்லியன் கிலோகிராம் அரிசியை விற்பனை செய்துள்ளது. 2024செப்டம்பர் முதல் 2025 ஜனவரி 15ஆம் திகதி வரை ஏறத்தாழ13 மில்லியன் கிலோகிராம் உள்ளூர் அரிசி இதன் ஊடாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.
2024 டிசம்பர் மாதத்தினுள் 893,442 தேங்காய்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவற்றில் 726,285தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2.5 உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான இறக்குமதித் தீர்வை வரிகள் குறித்த பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் உள்ளூர் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உதா.: உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் ரின் மீன்.

2.6 உள்நாட்டுச் சந்தையில் எதிர்காலத்தில் பற்றாக்குறை ஏற்படக்கூடிய உப்பை நுகர்வோருக்கு தட்டுப்பாடு இல்லாமல் வழங்குவதற்காக, உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் எழுப்பிய கரிசனைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம்30,000 மெட்ரிக் தொன் அயோடின் சேர்க்கப்படாத உப்பை இறக்குமதி செய்தற்காக 2024.12.18ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2.7 தேசிய தரக் கொள்கையை செயல்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஊக்குவித்தல் பொருட்டு தேசிய தர சபையொன்றை நிறுவுவதற்கு 2024.07.01ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

2.8 உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குறைகள் தொடர்பாக பெறப்படும் அனைத்து பிரதிநிதித்துவங்களையும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி அவற்றுக்கு தீர்வுகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

2.9 புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்காக2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் அளித்தல்.

2.10 அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக, நுகர்வோர் நலன், உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளரின் வசதிகளை உறுதி செய்தல் பொருட்டு, சந்தை நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் பங்களிப்பை சான்றுறுதிப்படுத்துகையில், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் கலைப்பு தொடர்பாக 24/1712/627/001-1 ஆம் இலக்க மற்றும் 2024.09.02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, உடனடியாக அமலுக்கு வரும் வகையில் மேலதிக செயல்பாடுகளை நிறுத்தி வைத்தல், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தை மறுசீரமைத்தல் மற்றும்அதன் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடுதல்.

2.11 2024/2025 பெரும் போகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் மக்கள் வங்கியால் முகாமையிடப்படும் பின்வரும் களஞ்சியசாலைகளை கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்குக் கையளிக்கும் பொருட்டு24/2338/817/005 ஆம் இலக்க மற்றும் 2025/12/30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்தல்.

**களஞ்சியசாலைகள் பற்றிய விபரங்கள்**

*அட்டவணை இல 2.2 கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட களஞ்சியசாலைகள்*

| இல. | களஞ்சியம் அமைந்துள்ள நிலையம் | மாவட்டம் | கொள்ளளவு (மெட்ரிக் தொன்) | உரிமை |
|---|---|---|---|---|
| 1 | முருங்கன்* | மன்னார் | 5,000 | பொதுத் திறைசேரிச் செயலாளர் |
| 2 | மெதிரிகிரிய* | பொலன்னறுவை | 5,000 | |
| 3 | உபுல்தெனிய* | அனுரதபுரம் | 5,000 | |
| 4 | புத்தள* | மொனராகல | 5,000 | |
| 5 | கிளிநொச்சி* | கிளிநொச்சி | 5,000 | |
| 6 | எம்பிலிப்பிட்டிய* | ரத்தினபுரி | 5,000 | |
| 7 | தகம்புர - மெதிரிகிரிய** | பொலன்னறுவை | 3,000 | |
| 8 | ஹிங்குரங்கொட | பொலன்னறுவை | 4,000 | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் |
| 9 | பன்னேகமுவ | அம்பாந்தோட்டை | 4,000 | |
| 10 | ஓயாமடுவ | அனுரதபுரம் | 24,000 | அரசாங்க அதிபர் |
| மொத்த களஞ்சிசாலைக் கொள்ளளவு (மெட்ரிக் தொன்) | | | 65,000 | |

ஆதாரம்; கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

**குறிப்பு:*** பிராந்திய அபிவிருத்தி வங்கியால் முகாமையிடப்படுகிறது ** மக்கள் வங்கியால் முகாமையிடப்படுகிறது

# மூன்றாம் அத்தியாயம்

## 2024–முன்னேற்றம்

## 03. 2024இல் அடைந்த முன்னேற்றம் ( 2024.01.01 ஆம் திகதி முதல்2024.12.31 வரை)

### 3.1. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

#### I. 2024.12.31 ஆம் திகதி வரையான நிதியியல் முன்னேற்றம்

*அட்டவணை இல 3.1நிதியியல் முன்னேற்றம்*

| செலவின விபரம் | 2024 இற்கான திருத்தப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | 2024.12.31 வரையான வளர்ச்சி | |
|---|---|---|---|
| | | (ரூபா) | % |
| மீண்டெழும் செலவினம் | 1,323,295,000.00 | 1,007,929,990.94 | 76.17% |
| மூலதனச் செலவினம் | 34,600,000.00 | 6,755,854.22 | 19.53% |
| | **1,357,895,000.00** | **1,014,685,845.16** | **74.72%** |

ஆதாரம் :வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, கணக்கீட்டுப் பிரிவு

#### II. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அ) அரசியலமைப்புச் சட்டத் தேவையான அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவின் நான்கு கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டுள்ளன.

ஆ) அமைச்சின் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின்படி, அமைச்சின் நடவடிக்கைகள் முறைப்படி நடத்தப்படல் மற்றும் முறைப்படி மேற்கொள்ளப்படுகிறதா என்பதை விசாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், இதற்காக, 06 உள்ளக கணக்காய்வு விசாரணைகள் வெளியிடப்பட்டு அது தொடர்புடைய தீர்மானங்கள் பற்றி மேற்பார்வையிடப்பட்டன.

இ) செயலாளரால் குறித்தொதுக்கப்பட்ட ஆறு விசேட விசாரணைகள் மற்றும் முதற்கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை இல 3.2விசேட விசாரணைகளும் ஆரம்ப விசாரணைகளும்*

| தொடரில | திகதி | தொடர்பு இல | விடயம் | உரிய நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | 2024.06.05 | MT/IA/SPAU/2024/1 | அலுவலக உதவியாளர் சேவையின்III ஆம் தர நியமனம் தொடர்பான தகவல் வழங்கல் | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு |
| 02 | 2024.07.31 | MT/IA/SPAU/2024/2 | வர்த்தகத் திணைக்களப் பணியாளர் எண்ணிக்கை மற்றும் இன்வென்றறிப் பொருட்கள் பற்றிய விசேட விசாரணை | வர்த்தகத் திணைக்களம் |
| 03 | 2024.09.19 | MT/IA/SPAU/2024/3 | லலித் அத்துலத் முதலி மகபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய முகாமையைப் பரிசீலிப்பதற்குரிய விசேட கணக்காய்வு அறிக்கை | லலித் அத்துலத் முதலி மகபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் |
| 04 | 2024.11.24 | MT/IA/SPAU/2024/4 | நுகர்வோர் விவகார அதிகாரசபை அலுவலர்களிடமுள்ள முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடு குறித்து சிறப்பு தணிக்கை விசாரணை விசேட கணக்காய்வு விசாரணை | நுகர்வோர் விவகார அதிகாரசபை |
| 05 | 2024.12.03 | MT/IA/SPAU/2024/5 | 2024/2025 ஆம் ஆண்டிற்கு அமைச்சிற்கான சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு மீதான விசேட கணக்காய்வு விசாரணை அறிக்கை | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு |
| 06 | 2024.12.11 | MT/IA/SPAU/2024/6 | வர்த்தகத் திணைக்களத்தின் உள்ளக விவகாரங்களில் "ஊழல் மற்றும் மோசடி அறிவித்தல்" என்ற தலைப்பிலான அநாமதேய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் குறித்த விசேட கணக்காய்வு அறிக்கை. | வர்த்தகத் திணைக்களம் |

ஆதாரம் :வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## III. அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்

### அ) தாராபுரம் கூட்டுறவுக் கிராமிய வேலைத்திட்டம்

இந்த வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து24/0503/627/011 ஆம் இலக்க மற்றும்2024.04.01ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2024.03.11ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின்3 ஆம் பத்தியின்3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடவடிக்கை எடுப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டது. அதன்படி, இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குநிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள அரச-தனியார் பங்காண்மைக்கான தேசிய முகவரகம் (NAPPP) ஊடான, பொருத்தமான வேலைத்திட்டத்திற்கு இதைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்காக

2024 வரவுசெலவுத் திட்டத்தில் ரூ. 54 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தாலும், கொடுப்பனவு நடவடிக்கைகளில் ஏற்பட்ட சிக்கல்நிலை காரணமாக அதைச் செயல்படுத்த முடியவில்லை.

அதற்கிணங்க, உரிய அமைச்சரவை அறிவுறுத்தலின் மீது தற்போது அரச-தனியார் பங்காண்மைக்கான தேசிய முகவரகத்துடன் இது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், தற்போது, வேலைத்திட்டத்தின் எதிர்காலப் பணிகள் குறித்து புதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆ) தெற்கு அபிவிருத்தி வேலைத்திட்டம்**

2024 இல் இந்த வேலைத்திட்டத்தின் விலைப்பட்டிகளைத் தீர்ப்பதற்காக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் ஊடாக ரூ. 87 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும், கொடுப்பனவு நடவடிக்கையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக 2024.12.31 ஆம் திகதி வரையும் கொடுப்பனவு மேற்கொள்ள முடியவில்லை. அதன்படி, இந்தக் கோப்புகள் மற்றும் விலைப்பட்டிகளின்கொடுப்பனவு நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு அனுப்புவதற்கு, உரிய அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை எடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**இ) உணவுப் பாதுகாப்பிற்கான இணைந்த வேலைத்திட்டம் ( ரூ. 250 மில்லியன்)**

இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களின் கீழ் 2024.08.01 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் இந்த அமைச்சிற்கு அனுப்பப்பட்ட கடிதம் காரணமாக இந்த வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டியிருந்தது.

**ஈ) உணவுப் பாதுகாப்பிற்காக குறைந்த வருமானம் கொண்ட பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ( ரூ. 100 மில்லியன்)**

வேலைத்திட்டப் பணிகளுக்காக அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 6.5 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஜனாதிபதி தேர்தல் சட்டங்களின் கீழ் 2024.08.01 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் இந்த அமைச்சிற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் காரணமாக இந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டியிருந்தது..

**IV. நிறுவன நடவடிக்கைகள்**

அ) லலித் அதுலத்முதலி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை2024.09.12 ஆம் திகதி நடைபெற்றதுடன், லலித் அதுலத்முதலி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டன.

ஆ) புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான இலங்கையின் தேசிய புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கும், வர்த்தக முத்திரைகளைசர்வதேச ரீதியாகப் பதிவு செய்வதற்கும் ஏற்புடையபுலமைச் சொத்துச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தால் நிறுவப்பட்ட அதிகாரசபையை அதன் விரும்பிய நோக்கங்களை அடையக்கூடிய வகையில் மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2024.04.18 ஆம் திகதி நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் செய்ய வேண்டிய மாற்றங்கள் தொடர்பான பரிந்துரைகள் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஈ) அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் உதவி அளவீட்டு அலகுகள், தரநிலை சேவை அலுவலர் மற்றும் அளவியல் பரிசோதனை அலுவலர் பதவிகளுக்கான திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குஅங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள் மற்றும் தரநிலை சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கான குழுவை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

உ) உணவு ஆணையாளர் திணைக்களத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியை மீளாய்வு செய்வதற்காக திணைக்களத்தினால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுள்ளதுடன், அந்த. சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை மீளாய்வு செய்யப்பட்டு, 2024.08.12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உணவு ஆணையாளர் திணைக்களத்தை மறுசீரமைப்பதற்குத் தேவையான பணியாளர்கள் சரியாகஇனங்காணப்பட்டு,அது பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### V. தேசிய வர்த்தகக் கொள்கையைத் தயாரித்தல்

2023.08.11ஆம் திகதி மீளாய்வுக் குழுவினால் வழங்கப்பட்ட அபிப்பிராயத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் வர்த்தக்கக் கொள்கையின் இரண்டாவது வரைவு தயாரிக்கப்பட்டு, ஜனாதிபதி செயலகத்தின் ஏற்றுமதி அபிவிருத்திப் பிரிவின் மீளாய்வு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், இந்த அமைச்சினால் தயாரிக்கப்பட்ட மேலும், இந்த அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வரைவின் கருத்துருக் குறிப்பை மீளாய்வு செய்த பின்னர், அது ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### VI. இலங்கையின் தேசியக் கொள்கை

"இலங்கை தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை செயல்படுத்துவதில் சகல அரசு நிறுவனங்களின் பொறுப்புகள் மற்றும் பணிகள்" என்ற தலைப்பிலான வேலைத்திட்ட முகாமை மற்றும் மேற்பார்வைச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் பிரகாரம், 2025ஆம் நிதியாண்டில் அரசவரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கான வேலைத்திட்ட மதிப்பீட்டுக்கான முன்மொழிவுகள் கோரப்பட்டன.

அ) அதற்கிணங்க,தற்போது நிறைவடையும் தறுவாயில் உள்ள, 5000 மெட்ரிக் தொன் கொள்ளளவு கொண்ட, விவசாய உற்பத்திகளை கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் சேமிக்கக்கூடிய களஞ்சியத் தொகுதியின் வேலைத்திட்டம், மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதற்காக முகாமை மற்றும் மேற்பார்வைத் திணைக்கள அங்கீகாரம் பெறப்பட்டது.

ஆ) இந்த மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான ஏற்பாடுகள் 2025 வரவுசெலவுத் திட்டத்தின் கீழாகஇவ்வேலைத்திட்டம்முகாமை மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3.2 வர்த்தகத் திணைக்களம்

### I. பல்தரப்பு நடவடிக்கைப் பிரிவு

#### அ) உலக வர்த்தக ஸ்தாபனம்(WTO)

உலக வர்த்தக ஸ்தாபனத்தின்(WTO) 13 ஆவதுஅமைச்சரவை மாநாடு 2024 பெப்ரவரி 26 முதல் மார்ச் 1 ஆம் திகதி வரை அபுதாபியில் நடைபெற்றதுடன், வர்த்தக பிணக்குகள் குறித்து பலதரப்பு கலந்துரையால்கள் நடைபெற்றது.

விவசாய பேச்சுவார்த்தைகள் மற்றும் மீன்பிடி மானிய உடன்படிக்கை குறித்த 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தைகள் போன்ற விடயங்களில், இலங்கை G33 மற்றும் ஏனைய வளரும் நாடுகளுடன் இணைந்து, சர்வதேச பொருளாதார வலயங்களின் பிரத்தியேக பொருளாதார வலயங்களில் (EEZ) மீனவ சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்க மிகவும் நெகிழ்வான கொள்கைகளை வகுப்பதிலும் ஈடுபட்டது..

இஸ்ரேல் வர்த்தக அமைச்சருடன் இருதரப்பு சந்திப்புகளை கௌரவ வர்த்தக அமைச்சர் நடத்தியதுடன், பின்லாந்து, நெதர்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகளின் வர்த்தக அமைச்சர்களால் அனுசரணை வழங்கப்பட்ட உலக வர்த்தக ஸ்தாபனத்தின்(WTO) சட்டம் குறித்த

ஆலோசனை மத்திய நிலையத்தால்(ACWL) வழங்கும் உதவி தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட்டு நடத்தப்பட்ட நிபுணர்குழுக் கலந்துரையாடலிலும் பங்கேற்றார்.

உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினராக இலங்கையின் கடைசி வர்த்தகக் கொள்கை மீளாய்வு 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டதுடன், அடுத்த மீளாய்வு 2025 அக்டோபர் 15 மற்றும் 17 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ளது. இந்த நோக்கத்திற்காக,உலக வர்த்தக அமைப்பின் பொதுச் செயலாளர் அலுவலகஅறிக்கையின் பணிகளைத் தொடங்க அவர்களால் அனுப்பப்பட்டவினாக்கொத்து தொடர்பான விரிவான தகவல்களை, தொடர்புடைய நிறுவனங்களுடன் (அமைச்சுகள், திணைக்களங்கள், சபைகள் போன்றவை) ஒருங்கிணைந்து திணைக்களம் வழங்கியுள்ளது.

**உஸ்பெகிஸ்தானை உலக வர்த்தக ஸ்தாபனத்துடன் இணைத்தல் பற்றிய பேச்சுவார்த்தைகள்** - இலங்கை உஸ்பெகிஸ்தானுக்கு தேயிலை ஏற்றுமதி செய்வதில் ஆர்வமாக உள்ளதால், இத்திணைக்களம் இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து, கறுப்புத் தேயிலைக்கான குறைந்தபட்ச பிணைப்புத் தீர்வை வரி வீதம் மற்றும் ஆரம்ப பேச்சுவார்த்தை உரிமை (INR). யைப் பெற்றுக்கொண்டு உஸ்பெகிஸ்தானை உலக வர்த்தக அமைப்பில் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்துள்ளது.

**ஆ) WTO/ EU/ FAO/ IFAD/ WFP இல் இலங்கையின் பிரதிநிதித்துவம் பற்றிய செயற்பாடு**

பல்தரப்பு அரங்கில் நாட்டின் நலன்களைப் பாதுகாக்க, ஜெனீவா தூதரகம், விவசாய பேச்சுவார்த்தைகள், வர்த்தக வசதி, மீன்வள மானியங்கள், உலக வர்த்தக அமைப்பின் மறிசீரமைப்பு மற்றும் வர்த்தக மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட 69 பலதரப்பு கூட்டங்களில் பங்கேற்றது. ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துபாயில் நடைபெறும் 13 ஆவது உலக வர்த்தக அமைப்பின்அமைச்சர்கள் மாநாட்டிற்கான (MC13) தயாரிப்புகள் மற்றும் பங்கேற்பு மற்றும் 2025 இல் 5 ஆவது வர்த்தகக் கொள்கை மீளாய்வுக்கான ஆயத்தங்கள் ஆகியவை ஏனைய முக்கிய நடவடிக்கைகளில் அடங்கும். இலங்கையின் ஜெனீவா தூதரகம் உலக வர்த்தக அமைப்பின் குழு விவாதங்களில் பங்கேற்று, உணவுப் பாதுகாப்பு, விவசாயம், மீன்பிடி மானியங்கள் மற்றும் அபிவிருத்திப் பிரச்சினைகள் போன்ற முக்கியப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி 43 எழுத்துமூல மற்றும் வாய்மொழி மூலத் தலையீடுகளைச் செய்தது. அத்துடன், இலங்கையின் தேவைகளை முன்னேற்றுவதற்காக 25 இருதரப்பு மற்றும் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**தொழில்நுட்ப உதவி மற்றும் திறன் அபிவிருத்தியைக் கட்டியெழுப்புதற்கான வசதிகளைத் திட்டமிடல்** - வர்த்தகக் கொள்கை, சேவை வர்த்தகம், சுகாதார மற்றும் தாவர சுகாதாரத் தரநிலைகள்(SPS) உடன்படிக்கைகள் மற்றும் வர்த்தக வசதி வழங்கல் போன்ற உலக வர்த்தக அமைப்பின்உடன்படிக்கைகளில் அரசு அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளிலிருந்து இலங்கை பயனடைகிறது. . சர்வதேச வர்த்தக மத்திய நிலையம் (ITC) மற்றும் UNCTADபோன்ற அமைப்புகளின் ஆதரவுடன் இலங்கை அலுவலர்களுக்கு 12 நீண்டகால மற்றும் குறுகிய கால பயிற்சித் திட்டங்களைஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதரகம், பெற்றுள்ளது.

**இருதரப்பு ஊக்குவிப்பு நடவடிக்கைகள்** - இலங்கை வணிகங்களுக்கு சுவிட்சர்லாந்தில் வாய்ப்புகளை ஆராய்வதற்கு உதவியளித்து.முதன்மையாக மீன், மசாலாப் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் தொடர்பாக 14 ஏற்றுமதி வர்த்தக விசாரணைகளை இந்த நடவடிக்கை வசதிப்படுத்தியது.மேலும், "உலக வர்த்தக அமைப்பின் ஆரம்பத் திகதி" மற்றும் சுவிஸ்-இலங்கை வணிக கவுன்சிலைப் புனரமைப்பதற்கான முயற்சிகள் உட்பட 11மேம்பாட்டுவேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**குறிப்பிடத்தக்க சாதனைகள்** - முக்கியமான வர்த்தக பேச்சுவார்த்தைகளில் இலங்கையின் நலன்களை ஊக்குவித்தல் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கைகளை செயல்படுத்துவதற்கான நாட்டின் திறனை மேம்படுத்தல் பொருட்டு தொழில்நுட்ப உதவியைப் பெறுதல் ஆகியவை முக்கிய சாதனைகளில் அடங்கும். UNCTAD மற்றும் ITCஉடனான கூட்டு முயற்சிகள் இலங்கையின் வர்த்தகக் கொள்கைக் கட்டமைப்பை உருவாக்குவதிலும், உலக வர்த்தக அமைப்பின்வர்த்தக வசதி உடன்படிக்கையைச் செயற்படுத்துவதிலும் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தன. 2005 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் இருநது வந்த நடவடிக்கையின் ஒரு

முக்கிய படியாகஉஸ்பெகிஸ்தானுடனான இணைப்புப் பேச்சுவார்த்தைகளின் முடிவு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இருந்தது.

**இ) வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை(TFA)**

2023 யூன் மாதம் ஜனாதிபதி செயலகத்தில் நிதி அமைச்சின் தலைமையில் தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவின் (NTFC) காலாண்டு ரீதியான கூட்டங்களை நடத்துவதற்கான தீர்மானத்தின்படி, 2024 ஆகஸ்ட் 27 ஆம் திகதி தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவின் 01 ஆவது மற்றும் 02 ஆவது காலாண்டு கூட்டங்கள் நடைபெற்றன.
வர்த்தக வசதி உடன்படிக்கை தொடர்பான பல பிரிவுகளை இறுதித் திகதிக்கு முன்னர் முடிப்பது குறித்து WTO க்கு அறிவிக்கப்பட்டது. அந்த பிரிவுகள்; 2.2- ஆலோசனைகள், 7.3- சுங்க வரிகள் மற்றும் பிற கட்டணங்களை இறுதித் தீர்மானத்திலிருந்து விலக்கு அளிப்பதற்கான ஒதுக்கீடு மற்றும் 7.5 - அனுமதிக்குப் பிந்தைய விடுவித்தல் பற்றிய கணக்காய்வு என்பவாகும்.

2024 ஆம் ஆண்டில், ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் உலக வங்கி (WB) ஆகியவை தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவிற்கு தொழில்நுட்ப உதவி மற்றும் திறன் மேம்பாட்டு ஆதரவை வழங்கின. உலக வங்கி இடர் மேலாண்மைக்கும், ஆசிய அபிவிருத்தி வங்கி சுங்க நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கும் பெருமளவில் உதவியை வழங்கியது.

தேசிய ஒற்றைச் சாளர (NSW) முறை வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நிதி அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்ட வேலைத்திட்ட அமலாக்கற் பிரிவு(PIU), வேலைத்திட்ட அமுலாக்கற் குழுவின் (PIC) உறுப்பினராகத் தேவையான தகவல்களையும் ஆதரவையும் வழங்கியது.

**ஈ) வர்த்தகத் தீர்வுச் சட்டங்களை செயற்படுத்துதல்**

வர்த்தகத் திணைக்களத்தினால், மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வை வரிகளை விதிப்பது தொடர்பான விசாரணைகளைத் தொடங்குவதற்கான ஆரம்பஒழுங்குவிதிகள் இறுதி செய்யப்பட்டு, அவற்றை வெளியிடுவதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பியுள்ளது. விசாரணை செயல்முறைக்குத் தேவையான தொடர்புடைய செயற்பாட்டு வழிகாட்டுதல்கள் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகள் வர்த்தகத் திணைக்களத்தால் வரைவு செய்யப்பட்டன.

**உ) இலங்கை உற்பத்தியாளர்கள்/ஏற்றுமதியாளர்களிற்கு எதிராகஏனைய நாடுகளால் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள்**

கம்போடியா மற்றும் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் காகித கோப்பு உறைகள் தொடர்பில் மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வை விதித்தல் பற்றிய விசாரணையொன்றை2022நவம்பர் 12 ஆம் திகதிஐக்கிய அமெரிக்காவின் வர்த்தககத் திணைக்களத்தால் (USA-DoC) ஆரம்பிக்கப்பட்டது.

2024 ஆகஸ்ட் 29 ஆம் திகதி, ஐரோப்பிய ஒன்றியம் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மிதிவண்டிகள் மீது விதிக்கப்பட்ட மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியது, இது இந்தோனேசியா, மலேசியா, இலங்கை மற்றும் துனீசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கை மிதிவண்டி ஏற்றுமதியாளர்களும் இந்த மீளாய்வில் பங்குதாரர்களாக உள்ளனர். கம்போடியா, இந்தோனேசியா, மலேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை மற்றும் துனீசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மிதிவண்டிகள் மற்றும் சில மிதிவண்டி பாகங்களுக்கு எதிராக, 2024.08.23ஆம் திகதி மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வை வரிகள் குறித்த ஐக்கிய இராச்சியத்தின் இடைக்கால மீளாய்வு தொடங்கப்பட்டது.

இந்த விசாரணைகள் தொடர்பாக இலங்கை வர்த்தகத் திணைக்களம், இலங்கை அரசாங்க பங்குதாரர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தியது. மேலும், சீனாவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய மற்றும் ஐக்கிய இராச்சிய நாடுகளுக்கு மிதிவண்டி தயாரிப்புகள் மீது விதிக்கப்பட்ட மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வை வரிகளை மீறுவதாக எழுந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த விசாரணைகள்

அமைந்துள்ளமையால், இந்த விசாரணையில் பங்கேற்கக்கூடிய வழிகள் குறித்து இலங்கை மிதிவண்டி உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது.

**வர்த்தக தீர்வு பற்றிய பிணக்குகளிற்கு ஆலோசனை வழங்குதல்**: இலங்கையில் முதலீடு செய்வதற்கும் நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டுள்ள மெத்தைகள் மற்றும் சூரிய தொகுதிகள் போன்ற பல தொழிற்சாலைகள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் பிற நாடுகளால் தொடங்கப்படக்கூடிய வர்த்தக தீர்வு விசாரணைகள் குறித்து திணைக்களத்தால் இலங்கை முதலீட்டு சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. உலகளாவிய இறால் பதப்படுத்துதல் மற்றும் சூரிய சக்தி பனல் கைத்தொழில்கள், மற்றும் இலங்கையின் கைத்தொழில் துறைக்கான முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் பிற நாடுகளால் விதிக்கப்பட்ட வர்த்தக தீர்வு நடவடிக்கைகளால் ஏற்படும் சாத்தியமான அபாயங்கள் குறித்தும் திணைக்களத்தின் வர்த்தக தீர்வுகள் பிரிவு ஆய்வு நடத்தியது.

**ஊ) தொழில்நுட்ப உதவி (Technical Assistance)**

உலக வர்த்தக அமைப்பின் வளவாளர்களுடன் இரண்டு தேசிய பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. முதல் பயிற்சிப் பட்டறை2024 பிப்ரவரி இல் சுகாதார மற்றும் தாவர சுகாதார நடவடிக்கைகள் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் மற்றையது 2024 ஜூலை இல் இலங்கையின் சூழலில் வர்த்தக வசதி உடன்படிக்கை மற்றும் அதன் எதிர்காலம் குறித்து கலந்துரையாடப்பட்டது. இரண்டு பயிற்சிப் பட்டறைகளிலும் தனியார் மற்றும் பொதுத் துறைகளைச் சேர்ந்த சுமார் 60 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

2023 நவம்பர் மற்றும் 2024 மார்ச் மாதங்களில் சுகாதார மற்றும் தாவர சுகாதார நடவடிக்கைகள் பற்றிய (SPS) உடன்படிக்கையின் உலக வர்த்தக அமைப்புக் குழுக் கூட்டங்களில் பங்கேற்கஅமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் கீழ் உள்ள வர்த்தகச் சட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் (CLDP) இணைந்து சுகாதார அமைச்சின் FCAUபிரிவுக்கு, ஆதரவை வழங்குதல்

2024 மே இல் சர்வதேச வர்த்தக மத்திய நிலையத்தின் ஆசிய பசிபிக் பிராந்திய பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ததுடன் வர்த்தக வசதிப்படுத்தல் ஏற்பாடுகளை செயற்படுத்தும் நிறுவனங்களின் சார்பாக ஐடிசியிடமிருந்து தொழில்நுட்ப உதவியைப் பெற வர்த்தக வசதிப்படுத்தல் ஏற்பாடுகளில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகள் குறித்து உலக வங்கியால் வழங்கப்பட்ட கொள்ளளவைக் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன.

கடற்றொழில் அமைச்சினதும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தினதும் அலுவலர்கள் மற்றும் உலக வர்த்தக அமைப்பு நிபுணர்கள் உட்பட உலக வர்த்தக அமைப்பின் கடற்றொழில் மானிய உடன்படிக்கை குறித்த விழிப்புணர்வு அமர்வுகளை ஒருங்கிணைத்தது.

உலக வர்த்தக அமைப்பின் TFAF-இற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்மொழிவைத் தயாரிப்பதற்காக, சர்வதேச வர்த்தக மத்திய நிலையம் மற்றும் இலங்கை சுங்கத்துடன் ஒருங்கிணைந்து, முன்கூட்டிய ஒழுங்குவிதிகளின்(Advance Rulings)கீழ் தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கான உத்தேசத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

## II. இருதரப்பு நடவடிக்கைப் பிரிவு

**அ) அவுஸ்திரேலியா-இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கை; காலாண்டுப் பணிக்குழுக் கூட்டங்கள்**

2024மே மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் அவுஸ்திரேலியா-இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஏற்பாட்டின் (TIFA) கீழ் நிறுவப்பட்ட பணிக்குழுவின் இரண்டு காலாண்டு ரீதியான கூட்டங்கள் நடத்தப்பட்டன. முதலீடு, விவசாயம், அறிவுப் பகிர்வு மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றில் கவனம் செலுத்தி, இரு தரப்பினரும் கூட்டாக தயாரித்த செயல் திட்டம் குறித்து விவாதங்கள் நடந்தன. அதன்படி, கடந்த ஆண்டில் இலங்கையில் சுரங்கத் திட்டங்கள் மற்றும் விவசாயத் திட்டங்களுக்கான தொழில்நுட்ப உதவியைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**ஆ) வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான ஐரோப்பிய ஒன்றியம்-இலங்கை பணிக்குழு**

வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான ஐரோப்பிய ஒன்றியம்-இலங்கை பணிக்குழுவின்(Working Group Meeting)கூட்டம் ஒன்று2024பெப்ரவரி06ஆம் திகதி இரு தரப்பினதும் உயர்மட்ட அலுவலர்களின் பங்களிப்புடன் ஒழுங்கு முறைப்படி நடைபெற்றது. இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களில் பொருளாதார மற்றும் வர்த்தகக் கொள்கை அபிவிருத்தி, இருதரப்பு சந்தை அணுகல் சிக்கல்கள், காடழிப்பு ஒழுங்குமுறை உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய ஒழுங்குபடுத்தல் அபிவிருத்திகள், GSP பிரேரணை மற்றும் வர்த்தகத்திற்கான ஆதரவு ஆகியவை அடங்கும். பணிக்குழு கூட்டத்தில், நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முக்கிய கொள்கை தலையீடுகளை இலங்கை தரப்பு எடுத்துரைத்தது. தற்போது பேச்சுவார்த்தையில் உள்ள புதிய GSP திட்டத்தின் அம்சங்களை ஐரோப்பிய ஒன்றியத்தரப்பு எடுத்துரைத்தது. ஒழுங்குமுறை இணக்கத்திற்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் சந்தை அணுகலுக்கான சான்றளிப்புத் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பது உள்ளிட்ட பல சாத்தியமான ஒத்துழைப்புத் துறைகள் குறித்தும் இரு தரப்பினரும் விவாதித்தனர். வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், எதிர்காலத்தில் இருதரப்பு பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கு உகந்த சூழலை உருவாக்குவதிலும் எதிர்காலத்தில் உற்பத்தி ரீதியான உரையாடலைத் தொடர்வதன் முக்கியத்துவத்தையும் இரு தரப்பினரும் அங்கீகரித்தனர்.

பணிக்குழு கூட்டத்தின் முன்னேற்றம் 2024பிப்ரவரி 22 ஆம் திகதி நடைபெற்ற 26 ஆவது ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை கூட்டு ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடப்பட்டது.

**இ) ஐரோப்பிய ஒன்றிய GSP உத்தேசத் திட்டத்தின் கீழ் இந்தோனேசிய துணிகளைப் பயன்படுத்தி ஆடை ஏற்றுமதிக்காக பிராந்தியங்களுக்கு இடையேயான ஒன்றிணைந்த வசதியளித்தல்**

HS அத்தியாயங்களின் 51 -55, 58 மற்றும் 60 இன் கீழ் வரும் இந்தோனேசிய மூலத்தைச் சேர்ந்த துணி மற்றும் பொருட்களைப் பயன்படுத்தி ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியத்திற்கான HS அத்தியாயங்களின் 61, 62மற்றும் 63 இன் கீழ் சில துணி மற்றும் ஆடைகளை உற்பத்தி செய்வதற்காக மற்றும் அத்தகைய உற்பத்திகளுக்காக ஐரோப்பிய ஒன்றிய GSP திட்டத்தின் கீழ் தீர்வைவரிச் சலுகைகளுக்கான வசதிகளை வழங்கி, அதற்காக இலங்கை மற்றும் இந்தோனேசியாவின் கூட்டு விண்ணப்பத்தின் மீது 2024ஜூலை 09ஆம் திகதி ஐரோப்பிய ஆணைக்குழு சாதகமான முடிவை எடுத்துள்ளது. இரு நாடுகளும் GSP பயனாளி நாடுகளாக இருக்கும் வரை இந்த சலுகை தொடரும்.

**ஈ) ஐக்கிய இராச்சியத்தினது வளர்முக நாடுகளின் வர்த்தகத் திட்டம் (DCTS)**

இலங்கை2023 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தினது வளர்முக நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் பயனாளியாக மாறியது. வளர்முக நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் போது இந்தோனேசிய துணிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஆடைப் பொருட்களுக்கான தீர்வை வரிச் சலுகைகளைப் பெறுவதற்காக இந்தோனேசியாவுடன் கூட்டு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் பணியில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

**உ) ஈரான் மற்றும் இலங்கைக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் 12 ஆவது அமர்வு**

நிரல் அமைச்சுகள் மற்றும் இலங்கை பங்குதாரர்களுடன் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட செயலமர்வுகள் பற்றிய முதற்கட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன்,2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 12 வது அமர்வை நடத்துவதற்கான திகதிகள் ஈரான் தரப்பிற்கு முன்மொழியப்பட்டன. எனினும், அந்தக் காலகட்டத்தில் நடைபெறவிருந்த தேர்தல்கள் காரணமாக, அந்த செயலமர்வு2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**ஊ) 'ஒரு கோடு ஒரு பாதை' என்ற எண்ணக்கருவின் கீழ் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு.**

இலங்கையின் முக்கிய வர்த்தக பங்காளியாக சீனாவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, வர்த்தகத் திணைக்களமானது, ஒரு கோடு ஒரு பாதை என்ற எண்ணக்கருத்தை செயல்படுத்துவது தொடர்பாக நிதி அமைச்சிற்கு பரிந்துரைகள்/ முன்மொழிவுகளை வழங்கியுள்ளது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்பேச்சுவார்த்தைகளின் தொழில்நுட்ப தன்மையைக் கருத்தில் கொண்டு, சுதந்திர

வர்த்தக உடன்படிக்கையின்பேச்சுவார்த்தைகளை ஒரு கோடு, ஒரு பாதை என்ற எண்ணக்கருத்திலிருந்து அணுகுவதன் முக்கியத்துவம் திணைக்களத்தால் முன்மொழியப்பட்டது.

**எ) மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையில் கூட்டு ஆணைக்குழுவின் கீழ் முன்னேற்றத்தை இற்றைப்படுத்தல்.**

மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, முன்மொழியப்பட்ட கூட்டு வர்த்தக பணிக்குழுவிற்கான (JWGT) வரைவு ஒழுங்குவிதிகள் (TOR) மீதான அதன் அவதானிப்புகளை வர்த்தகத் திணைக்களம் (DOC) மீளாய்வு செய்து இறுதி செய்துள்ளது. இந்த அவதானிப்புகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்புவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுகூட்டு வர்த்தக பணிக்குழுவை நிறுவுவதற்கான ஒரு முக்கிய படியைக் குறிக்கிறது.

**ஏ) வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இலங்கை-ரஷ்யா அரசுகளுக்கிடையேயான ஆணைக்குழு**

திணைக்களம், இலங்கை தேயிலை சபையின் ஒத்துழைப்புடன், இரு நாடுகளுக்கும் இடையிலான முன்மொழியப்பட்ட சுங்க ஒத்துழைப்பு உடன்படிக்கை குறித்த அவதானிப்புகளை இலங்கை தேயிலை வாரியத்துடன் இணைந்து இந்தத் துறை வழங்கியதுடன், இந்த அவதானிப்புகள் தொடர்புடைய தரப்பினரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

**(ஐ) இருதரப்பு அரசியல் ஆலோசனைகள் மற்றும் ஏனைய இருதரப்பு ஏற்பாடுகள்**

மீளாய்வுக் காலத்தில், வெளிவிவகார அமைச்சினால் பின்வரும் நாடுகளுக்காக நடத்தப்பட்ட இருதரப்பு அரசியல் ஆலோசனைகளுக்கு வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் பற்றிய உள்ளீடுகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டது;ஐக்கிய இராச்சியம், சுவிட்சர்லாந்து, துர்க்மெனிஸ்தான், பூட்டான், ஜெர்மனி, எஸ்டோனியா.

இலங்கைக்கும் டொமினிகன் குடியரசுக்கும் இடையில் வர்த்தகமுதலீடு மற்றும் உற்பத்திச் சங்கிலி குறித்த கூட்டுப் பணிக்குழுவை நிறுவுதல் தொடர்பாக முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் வரைவைத் திருத்துவதற்கான பரிந்துரைகள்/முன்மொழிவுகள் இந்தத் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.

**ஒ) இலங்கை - எகிப்து வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழு(JCTEC)**

கூட்டு ஆணைக்குழுவின் 3 ஆவது அமர்வுக்கான தயாரிப்புகளின் ஒரு பகுதியாக, நிரல் அமைச்சுகள் மற்றும் இலங்கை பங்குதாரர்களுடன் கலந்துரையாடல் ஒன்று வர்த்தகத் திணைக்களத்தால் நடத்தப்பட்டது.

**ஓ) இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழு**

இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் 3 ஆவது அமர்வைக் கூட்டுவதற்கு பங்குதாரர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டன.

**எ) பேச்சுவார்த்தை மட்டத்திலுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை**

மீளாய்வுக் காலத்தில், சர்வதேச வர்த்தக அலுவலகத்தினால்(OIT), இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் இந்தோனேசியா மற்றும் வங்காளதேசத்துடன் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் குறித்த பேச்சுவார்த்தைகள் ஒருங்கிணைக்கப்பட்டன. பண்ட வர்த்தகம், உள்நாட்டுச் சட்டங்கள், SPS மற்றும் TBT, வர்த்தக தீர்வுகள், சேவை வர்த்தகம், சுங்க ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக வசதி மற்றும் முதலீடு உள்ளிட்ட உப குழுக்களுக்கான தலைவர், இணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளை வகிக்கும் திணைக்கள அலுவலர்கள், தேவையான சகல அறிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகளை உரிய குழுக்களுக்கு வழங்கினர்.

**III.** வலய நடவடிக்கைப் பிரிவு

**அ) இந்து சமுத்திர வலய கரையோர நாடுகள் அமைப்பின் வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான பணிக்குழு (*IORA-WGTI)***

2024 நவம்பர்27 ஆம் திகதி நிகழ்நிலையில் நடைபெற்ற இந்து சமுத்திர வலய கரையோர நாடுகள் அமைப்பின் (IORA) வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான பணிக்குழுவின் (WGTI**)** 23 ஆவது கூட்டத்தில் இலங்கை பங்கேற்றது. கூட்டத்தின் போது, பிரதிநிதிகள் 2 ஆவது வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான பணிக்குழுவின் செயற் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன்,UNCTADஇன் வளவாளரின் பங்களிப்புடன், விநியோகச் சங்கிலி மீளமைப்பில் வர்த்தக மற்றும் முதலீட்டின் செயலாற்றுகை குறித்த மூலோபாய கலந்துரையாடலும் நடத்தப்பட்டது..

**IORBF**இன் தலைவராக, லங்கா வர்த்தக சபை, இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து"இந்து சமுத்திர வலய கரையோர நாடுகள் அமைப்பு" வணிக உச்சி மாநாட்டை "நிலையான வளர்ச்சி - வரையறை எல்லைகள்"" என்ற எண்ணக்கருவின் கீழ் 2024 மே 28 முதல் 29 வரை கொழும்பு ஷங்க்ரி-லா ஹோட்டலில் ஏற்பாடு செய்தது.

வணிக உச்சிமாநாட்டின் முக்கிய நோக்கம், 23இந்து சமுத்திர வலய கரையோர நாடுகள் அமைப்பின்உறுப்பு நாடுகள் மற்றும் விவசாயம், தகவல் தொழில்நுட்பம், வழங்கல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்மற்றும் பெண்கள் வலுவூட்டுதல்போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் 12பங்காளர்களைச் சேர்ந்த வணிகத் தலைவர்கள்,கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே சம்பாசணை, வலையமைப்பு. மற்றும் ஒத்துழைப்பை வளர்த்தல் என்பனவாகும்.. இந்த நிகழ்வில் மொத்தம் 300 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**ஆ) பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா நாடுகளின் சுதந்திர வர்த்தக வலயம்**(BIMSTEC FTA)

சுதந்திர மற்றும் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் (**FTA/PTA**) கீழ் வர்த்தக தாராளமயமாக்கல் திட்டங்களை மீளாய்வு செய்வதற்காக2021.02.08 ஆம் தேதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, **BIMSTEC** சுதந்திர வர்த்தக வலயத்தின் கீழ் **HS** 2017 இல் தீர்வைவரிச் சலுகைகளை மறுசீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. BIMSTEC செயலகத்தினால் வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவின் (**TNC**) 22 ஆவது கூட்டத்தில் **BIMSTEC** செயலகத்தால் உள்ளக சட்டங்கள் குறித்த (WG-ROO) இந்தக் கூட்டம்**,** 2024 செப்டம்பர் 18-19 வரை பங்களாதேஷின் டாக்காவில் நடத்துவதற்குப் பிரேரிக்கப்பட்டது.

**இ) இலங்கை வர்த்தக நுழைவாயிலின் (**SLTIP**) படிப்படியான செயல்பாடு**(SBSF)

படிப்படியான செயல்பாடு (**SBSF)** என்பது. தற்போதைய இலங்கை வர்த்தக நுழைவாயிலின் பயனர் நட்பை மேம்படுத்துவதற்கான மேலதிக செயல்பாடாக உள்ளது. இதன் கீழ், 49 ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் 06 இறக்குமதி உற்பத்திகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்,ஆர்வமுள்ள வணிகர்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் குறித்த விரிவான தகவல்களை வழங்குகின்றன.இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை மற்றும் தேசிய வர்த்தக மற்றும் கைத்தொழில் சபை ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு அமர்விலும் இலங்கை வர்த்தக நுழைவாயில் **(**SLTIP) உள்ளடக்கியுள்ள படிப்படியான செயற்பாடு தொடர்பில், வர்த்தக நடைமுறைகள் மற்றும் அவை எவ்வாறு செயல்படுகின்றன மற்றும் வர்த்தக பங்குதாரர்களுக்கு அவற்றின் நன்மைகள் பற்றியும் படிப்படியான அறிமுகம் வழங்கப்பட்டது..

**ஈ) இலங்கை வர்த்தக நுழைவாயில் (SLTIP)**

"சைபீரியா" என்பது லாவோஸை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனமாகும், இது 2022 ஜனவரி இறுதி வரை இலங்கை வர்த்தக நுழைவாயிலை (**SLTIP**) நடத்தி பராமரித்தது. SLTIP-ஐ

நடத்துவதற்கும் பராமரிப்பதற்கும் உள்ளூர் நிறுவனத்தை ஆட்சேர்ப்பு செய்வதற்காக ICTA-நிறுவத்தின் ஆதரவுடன் திணைக்களத்தால் விலைமனு கோரல் தகவல்கள் (IFQ) பெறப்பட்டு நிறைவடைந்துள்ளது. விலை மனு கோரல்முறையின் கீழ் 11 நிறுவனங்களிடமிருந்து (ICTAஇனால் வழங்கப்பட்ட) விலை மனுகள் கோரப்பட்டன. 2021.11.15 முதல் (ஒரு வருட ஒப்பந்தம்) செயற்படும் வகையில்SLTIP-ஐ பராமரிப்பதற்குவிலைமனுகளை சமர்ப்பித்த 03 நிறுவனங்களில் இருந்து "Arimac Lanka Pvt Ltd" நிறுவனம் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், ICTA நிறுவனத்தால் லங்கா அரசதகவல் களஞ்சியத்தில்(LGC) அண்மைய தகவல்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. பின்னர் அரிமாக் லங்கா பிரைவேட் லிமிடெட் இன் சேவை காலத்தை குறைநிரப்பு அடிப்படையில் 2023.12.31ஆம் திகதி வரை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டித்தது. அதைத் தொடர்ந்து, தரவு இடம்பெயர்வு நடவடிக்கைகள் (முந்தைய சேவையகத்திலிருந்து LGC க்கு) மற்றும் SLTIP நிர்வாகி இணையத்தளப் பயிற்சி ஆகியவை “சைபீரியா” நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திணைக்களத்தால்42 பங்குதாரர் நிறுவனங்களுடன் SLTIP-ஐ தொடர்ச்சியாகஇற்றைப்படுத்தி வருகிறது.

**உ) வர்த்தக அறிக்கைகளைத் தயாரித்தல்**

மீளாய்வுக் காலப்பகுதியில் பல்வேறு வெளியகத் தரப்பினரின் வேண்டுகோளின் பேரில், விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் தரப்பினர்சார்பு வர்த்தகம் குறித்த ஏறத்தாழ 250 வர்த்தக சுருக்கங்கள்/அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன/ இற்றைப்படுத்தப்பட்டன.

## IV. வர்த்தக மேம்பாட்டுப் பிரிவு

**அ) வர்த்தக விசாரணை பற்றிய நடவடிக்கைகள்**

வர்த்தக அலுவலர்களுக்கு481 வர்த்தக விசாரணைகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இலங்கை உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளில் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தேவையான தகவல்கள்/வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது.. இலங்கை ஏற்றுமதியாளர்களிடமிருந்தும் ஏனைய வர்த்தகம் தொடர்பான நிறுவனங்களிடமிருந்தும் திணைக்களத்திற்குப் பெறப்பட்ட 45 விசாரணைகள் பின்தொடர்தலுக்காக வர்த்தக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன..

**ஆ) வர்த்தகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கல்**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான பிணக்குகளை சுமுகமாகத் தீர்ப்பதற்காக, பிணக்கில் ஈடுபட்டுள்ள தரப்பினரிடமிருந்து அவதானிப்புகளைக் கோரி 45முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. வர்த்தகத் திணைக்களம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான வர்த்தக பிணக்குகளை பிணக்கில் உள்ள தரப்பினரிடையே ஒரு இணக்கமான தீர்வு மூலம் தீர்ப்பதற்கான ஒரு வசதியாளராகச் செயல்படுகிறது. மீளாய்வுக் காலகட்டத்தில், வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களினால் இதுபோன்ற 57முறைப்பாடுகள் கையாளப்பட்டுள்ளதுடன்,திணைக்களத்திற்கு நேரடியாகப் பெறப்பட்ட 28முறைப்பாடுகள் மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**இ) வதிவிட விசா உரிமங்களுக்கான பரிந்துரைகளை வழங்குதல்**

வர்த்தக மற்றும் சேவைத் துறைகளில் 57 வெளிநாட்டினர் மற்றும் 30 சார்புடையவர்களை மீளாய்வு செய்த பின்னர், அவர்களுக்கு வதிவிட விசா பரிந்துரைக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

**ஈ) இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ISFTA) கீழ் ஆடை உற்பத்திகளுக்கு வழங்கப்பட்ட தீர்வைவரி விகித ஒதுக்கீட்டுச் சான்றிதழ்கள்**

6.8 மில்லியன் பங்குகளுக்கு 2,195 தீர்வை வரிவிகித ஒதுக்கீட்டுச் சான்றிதழ்கள் (TRQC) வழங்கப்பட்டன.

**உ) 1949 ஆம் ஆண்டின் ஈட்டுச் சட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்**

ஈட்டுச் சட்டத்தின் பிரிவு 114(i) இன் கீழ் வர்த்தக அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, . "அங்கீகரிக்கப்பட்ட கடன் நிறுவனங்கள்" என்று வர்த்தமானியில்

பிரசுரிப்பதற்காக கடன் முகவரகங்களினை வர்த்தகப் பணிப்பாளர் நாயகம் பரிந்துரைக்கும் பொருட்டு 3 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**ஊ) பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர உடன்படிக்கையின் கீழ் பாஸ்மதி அரிசி ஒதுக்கீட்டிற்கான தீர்வைவரி விலக்குக்கான பரிந்துரை கடிதங்களை வழங்குதல்.**

பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர உடன்படிக்கையின் கீழ் 966 மெட்ரிக் தொன் பாஸ்மதி அரிசி இறக்குமதிக்கு வரி விலக்கு அளிக்கும்24 பரிந்துரை கடிதங்கள் வழங்கப்பட்டன.

**எ) வர்த்தக கண்காட்சிகள்/கண்காட்சிகள்/நிகழ்வுகள் ஒழுங்கமைப்பு**

i. வர்த்தகத் திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட *8*ஆவது சீன - தெற்காசியக் கண்காட்சி பொருட்டு இலங்கை பிரதிநிதிகள் குழு ஏற்பாடு செய்யப்பட்டதுடன்,இதில் 106 நிறுவனங்கள் அடங்கியுள்ளதோடு, அமைச்சின் செயலாளர் அதற்கு தலைமை தாங்கினார்.

ii. வர்த்தகத் திணைக்களத்தால்சிறு மற்றும் நடுத்தர வர்த்தகப் பிரிவில் ஏற்றுமதியாளர்களுக்காக நாடு முழுவதும் விழிப்புணர்வு அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன்,'Trade Up Sri Lanka'என்ற புதிய கருப்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்க விழா 2024 ஜூன் 26 அன்று மாத்தறை மாவட்டத்தில் 45 அரசு மற்றும் தனியார் வணிக ஆதரவு நிறுவனங்களின் ஆதரவுடனும் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகப் பிரிவில் 400 இற்கும் மேற்பட்ட வணிகங்களின் பங்கேற்புடனும் 2024 யூன் 26 ஆம் திகதி மாத்தறை மாவட்டத்தில் ஆரம்ப விழா நடைபெற்றது.

**ஏ) வெளிநாட்டு வர்த்தக பிரதிநித்துவம்**

இக்காலப்பகுதியில் வெளிநாடுகளில் வர்த்தக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

*அட்டவணை இல 3.3வெளிநாடுகளில் வர்த்தக அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்*

| தொடரில | வர்த்தக அலுவலர்களின் பணிகள் | மொத்த செயற்பாடுகளின் எண்ணிக்கை 2024.01.01 முதல் 2024.11.30 வரை |
|---|---|---|
| 1 | வணிக சரிசெய்தல்களை மேற்கொள்ளல் (B2B கூட்டம்) | 1122 |
| 2 | வணிக வலையமைப்பு அமர்வுகளை நடத்துதல் | 89 |
| 3 | இலங்கை வர்த்தக ஊக்குவிப்பு திட்டங்களை பிற நாடுகளில் நடத்துதல் (வணிக மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவை) | 70 |
| 4 | ஏனைய நாடுகளில் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகள்/ சந்தைகளில் இலங்கையர் பங்கேற்பை ஏற்பாடு செய்தல். | 52 |
| 5 | இலங்கையில் நடைபெறும் கண்காட்சிகள்/வர்த்தக கண்காட்சிகளுக்கான உள்ளக கொள்வனவுப் பங்கேற்பைஒழுங்கமைத்தல் | 32 |
| 6 | அமைச்சர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்கள் உட்பட இலங்கையிலிருந்து வர்த்தக பிரதிநிதிகள் ஓம்புகை நாட்டிற்கு வருகை தருவதை ஏற்பாடு செய்தல். | 58 |
| 7 | வர்த்தக பிணக்குகள்/ முறைப்பாடுகளைக் கையாளல் | 57 |
| 8 | ஏற்றுமதி வர்த்தக விசாரணை பொருட்டு நடவடிக்கை எடுத்தல் | 481 |

| | | |
|---|---|---|
| 9 | சந்தைத் தகவல்கள் மற்றும் சந்தைப் பிரவேச அறிக்கைகள் வழங்கல் | 92 |
| 10 | இலங்கை கண்காட்சிகளை நடத்தும்/அதிகாமளிக்கப்பட்ட நாட்டில் மேம்பாட்டைச் செய்தல் | 121 |
| 11 | சாத்தியமான வணிக பங்குதாரர்கள் மற்றும் வர்த்தக சபைகளுடன் சந்திப்புகளை நடத்துதல் | 508 |
| 12 | சந்தை அணுகல் பிரச்சினைகளில் தலையிடுதல், ஓம்புகை நாட்டு அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பு மற்றும் வர்த்தகக் கொள்கையில் ஓம்புகை அரசாங்கங்களுடன் ஒருங்கிணைதல். | 98 |
| 13 | ஏனைய வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகள் (உதா; இலங்கையிலும் வெளிநாட்டிலும் உரிய விலைமனு கோரல்கள் (RFP) | 867 |
| 14 | முதலீட்டு மாநாடுகளை நடத்துதல் | 35 |
| 15 | முதலீட்டு முன்மொழிவுகளை கையாளுதல் | 78 |
| 16 | முதலீட்டு ஊக்குவிப்பு திட்டங்களை ஏற்பாடு செய்தல். | 37 |
| 17 | முதலீடு தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் (உதா; முதலீட்டு விசாரணைகளில் பங்கேற்றல் போன்றவை) | 80 |
| 18 | சுற்றுலா மற்றும் விளம்பர பிரச்சாரங்களைத் திட்டமிடுதல்/ஒழுங்கமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்/வசதிப்படுத்தல். | 234 |
| 19 | பிற நாடுகளில் நடைபெறும் சுற்றுலாக் கண்காட்சிகளில் இலங்கையின் பங்கேற்பை ஏற்பாடு செய்தல்/வசதி செய்தல். | 30 |
| 20 | சுற்றுலா தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் (உதா;சுற்றுலா விசாரணைகள் போன்றன) | 463 |
| 21 | இணைந்த ஆணைக்குழுகள்/வர்த்தகம் மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படினக்கைகளை (TIFAs) ஒருங்கிணைத்தல் | 11 |
| 22 | செயற்பாட்டுக், குழு ஒருங்கிணைப்பு | 6 |
| 23 | ஏனைய இயைபுடைய செயற்பாடுகள் (அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவி) | 26 |
| 24 | WTO/EU/FAO/IFAD/WFP/UNCTAD, ஆகியவற்றில் இலங்கையின் பிரதிநிதித்துவம் பற்றிய செயற்பாடு | 63 |

ஆதாரம் :வர்த்தகத் திணைக்களம்

## V. மூலச்சான்றுக் கொள்கைப் பிரிவு

### அ) மூலச் சான்றிதழ்கள் வெளியிடுதல் (COOs) மற்றும் ஏனைய உதவிச் சேவைகள்

மூலச்சான்றுக் கொள்கைப் பிரிவினால் வெளியிடப்படும் மூலச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆதரவுச் சேவைகளுக்கான தரவு பின்வருமாறு.

*அட்டவணை இல 3.4மூலச் சான்றிதழ்களை வெளியிடுதல் மற்றும் பிற ஆதரவுச் சேவைகள்*

| தொடரில | பணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | வழங்கப்பட்ட மூலச் சான்றிதழ்கள் | 27,670 |
| 02 | ISFTA இன் கீழ் கோட்டா ஒதுக்கீடு | 2,745 |
| 03 | முன்னுரிமை திட்டத்தின் கீழ் புதிய பதிவு | 170 |
| 04 | EU-REX பதிவு | 51 |
| 05 | செலவுக் கூற்றுகளுக்கான அங்கீகாரம் | 6,544 |
| 06 | சத்தியப் பிரகடனம் | 1,950 |
| 07 | சரிபார்த்தல் | 356 |
| 08 | ஏற்றுமதியாளர்களுக்கு விபரமளித்தல்/ விளக்குதல் | 11,500 |
| 09 | வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை | 240 |
| 10 | நாளாந்தம் வழமையாக வெளியிடப்படும் மூலச் சான்றுகள் | 165 |

ஆதாரம் :வர்த்தகத் திணைக்களம்

### ஆ) மூலச் சான்றிதழ் வெளியிடும் நிகழ்நிலை முறைமை

வர்த்தகத் திணைக்களமானது,ITC மற்றும்GIZ இன் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியுடன், மூலச் சான்றிதழ்களை இலத்திரனியல் முறையில் வெளியிட, தற்போதுள்ள ECOO முறையை மேலும் விருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அம்முறைமையின் தற்போதைய இடைவெளிகள் நிவர்த்தி செய்யப்பட்டு புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. இந்த வேலைத்திட்டம் கோவிட்-19 தொற்றுநோயின் பின்னணியில் தொடங்கப்பட்டதுடன், இந்த முறை, ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகளைக் கண்டறிந்து, மூலச் சான்றிதழ்கள் மற்றும் பிற ஆதரவு சேவைகளை வழங்குவதை நெறிப்படுத்தி விரைவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், ITC மற்றும் வர்த்தகத் திணைக்கள வேலைத்திட்டத்தின் கீழ் பின்வரும் செயல்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன:

i. கொமர்ஷல் வங்கி, மக்கள் வங்கி, பான் ஏசியா வங்கி மற்றும் கார்கில்ஸ் வங்கி ஆகியவற்றுடன் இணைந்து LPOP வசதி, ஏற்றுமதியாளர்களுக்குமூலச் சான்றிதழ் வெளியிடலிற்கான மேம்படுத்தப்பட்ட இணையக் கொடுப்பனவு வசதியை மேற்கொள்ளும் இயலுமையைவழங்குகிறது.

ii. சேவை வழங்கற் தேவைகளுக்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்துடன் (ICTA) இணைந்து பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், இலங்கை அரசாங்க கிளவுட்டின் மீதுICTAஇனால் சேவையக இடம் ஒதுக்கப்பட்டது.

iii. மென்பொருள் அபிவிருத்தி நிறுவனம் நேரலை முறைமையில் தேவையான மேம்பாடுகள் மற்றும் மாற்றங்களைச் செய்தது. உதாரணமாக, வர்த்தகத் திணைக்களத்துடன் இணைந்து ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால்(DEA) அறிமுகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டு முறையின் கீழ் பாக்கு ஏற்றுமதியாளர்களுக்கான புதிய வழிமுறையை உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துடன் இலத்திரனியல் வசதியை ஒருங்கிணைத்தல். தற்போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துக்கான வருடாந்த ஒதுக்கீட்டை மேற்பார்வை செய்து இற்றைப்படுத்துவதற்கு இலத்திரனியல் முறை மூலச் சான்றிதழ் வழங்கல் முறையை அணுகலாம்.

iv. தற்போதுள்ள மற்றும் புதிய ஏற்றுமதியாளர்களுக்கான இலத்திரனியல் மூலச் சான்றிதழ்முறையை செயல்படுத்துவது குறித்த அறிவை மேம்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் தெளிவுபடுத்தல் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

v. வர்த்தகத் திணைக்களத்தின்,நிறுவனப் பதிவு, மீளாய்வுச் செயல்முறை, மூலச் சான்றிதழ்களை அங்கீகரித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய பயிற்சி மற்றும் செலவு அறிக்கைகள்/பிரமாணப் பத்திரங்களை மீளாய்வு செய்தல் என்பன நிறைவடைந்துள்ளது.

vi. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், ISFTA, SAFTA, SAPTA மற்றும்APTA உடன்படிக்கைகளின் கீழ் இலத்திரனியல் மூலச் சான்றுகளை வழங்குதல் காரணமாக93% மான நேரம் மிச்சப்படுத்தப்பட்டதுடன் கடதாசியற்ற சூழல் மேம்படுத்தப்பட்டதோடுமுழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டது.

## VI. வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்

*அட்டவணை இல 3.5வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்*

| செயற்பாடு | எதிர்பார்த்த வருமானம் மற்றும் பௌதிக இலக்கு | | 2024.12.31 வரையான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | நிதி(ரூ.மில்.) | பௌதிக | நிதி(ரூ.மில்.) | பௌதிக |
| சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் GSP திட்டத்தின் கீழ் ஏற்றுமதி கம்பனிகளைப் பதிவு செய்தல். | 2,160,000.00 | 150 கம்பனிகள் | 550,000.00 | 170 கம்பனிகள் பதிவு செய்யப்பட்டன. |
| இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமை வர்த்தகத் திட்டங்களின் கீழ் மூலச் சான்றிதழ்களை (COO) வழங்குதல். | 39,750,000.00 | 26,000 சான்றுப்பத்திரங்கள் | 41,505,000.00 | 27,670 சான்றுப்பத்திரங்கள் வெளியிடப்பட்டன. |
| இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ISFTA) கீழ் ஆடைப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைவரி விகித ஒதுக்கீட்டுச் சான்றிதழ்கள். | 1,450,000.00 | 2700 தீர்வைவரி விகிதாசார கோட்டாச் சான்றிதழ்கள் | 2,088,000.00 | 2784 சான்றுப்பத்திரங்கள் வெளியிடப்பட்டன |
| வதிவிட விசா உரிமத்துக்கான பரிந்துரை வழங்கல் | 3,210,800.00 | அங்கீகரிக்கப்பட்ட வதிவிட விசா எண்ணிக்கை: பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களின் படி | 1,572,050.00 | 59 விண்ணப்பதாரர்கள் மற்றும்30தங்கியிருப்போருக்கு வதிவிட விசா பரிந்துரை வழங்கப்பட்டது. |

ஆதாரம் :வர்த்தகத் திணைக்களம்

## 3.3. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்


### i. நிறுவன நடவடிக்கைச் செயற்பாட்டில் முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டில் லங்கா சதொச நிறுவனம் ரூ. 47.4 பில்லியன் வருவாயை (ஜனவரி - நவம்பர் வரை) ஈட்டியுள்ளதுடன் ரூ. 3 பில்லியன் நீண்ட கால கடன் தொகையை இவ்வருடத்தினுள் பூரணமாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வருடத்தின் மாதாந்த விற்பனை வருமானம் (வரி அடங்கலாக) பின்வருமாறு.

*யூன்அட்டவணை இல 3.6செயற்பாட்டு நடவடிக்கையில் முன்னேற்றம்*

| மாதம் | மாதாந்த வருமானம்(ரூ. மி.) |
|---|---|
| ஜனவரி | 4,623 |
| பெப்ரவரி | 4,713 |
| மார்ச் | 5,327 |
| ஏப்ரல் | 6,588 |
| மே | 4,210 |
| யூன் | 4,225 |
| யூலை | 4,447 |
| ஒகஸ்ட் | 4,689 |
| செப்ரெம்பர் | 4,652 |
| ஒக்ரோபர் | 4,518 |
| நவம்பர் | 4,411 |
| டிசம்பர் | 5,741 |
| **மொத்தம்** | **58,146** |




ஆதாரம் :வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

**ii. போக்குவரத்து முகாமை முறையைத் தாபித்தல்**

பொருட்கள் விநியோக செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் செலவுகளைக் குறைக்க போக்குவரத்து முகாமை முறையொன்று நிறுவப்பட்டுள்ளது.

**iii. மேலதிக வருமான வளர்ச்சி**

2023உடன் ஒப்பிடும்போது 2024 இல் இடைக்கால வரி வருமானம்100%அதிகரித்துள்ளது.

புதிய இடைக்கால வரி வருமான வாய்ப்புகளை அடையாளம் காண்பதன் மூலமும், ஏற்கனவே உள்ள இடைக்கால வரி உடன்படிக்கைகளை நீட்டிப்பதன் மூலமும் இந்த வருமான வளர்ச்சி சாத்தியமானது..

**iv. கடன் தீர்த்தல் மற்றும் கடன் வட்டிச் செலவைக் குறைத்தல்**

திறைசேரி உத்தரவாதத்தின் பேரில் மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூ. 3பில்லியன்கடன் தொகை 2024இல் முழுமையாக திருப்பிச் செலுத்தப்பட்டதுடன், கடன் தொகையில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் கடன் வட்டி விகிதம் குறைப்பு காரணமாக, 2023உடன் ஒப்பிடும்போது கடன் வட்டியை 100% இனால் குறைக்க முடிந்தது. 2020முதல் 2024வரையிலான காலப்பகுதியில் உரிய கடனைத் திருப்பிச் செலுத்தலில் தவறுகையின்றி சரியான நேரத்தில் முழுமையாக இக்கடன் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

**v. புதிதாக விற்பனை நிலையங்களைத் திறத்தல்**

2024 இல புதிதாக 06 விற்பனை நிலையங்கள் (அலதெனிய, தியத்தலாவ, தொம்பே, கிரிந்த, கந்தபொல, சேருநுவர) திறக்கப்பட்டன.

**vi. விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்தல்**

லங்கா சதோச நிறுவனம் ரூ.148 மில்லியன் செலவில் களுத்துறை தெற்கு, கெகிராவ, லுணுகல, கட்டுநாயக்க - 01, அனுராதபுரம் - 01, மாரவில, பதுளை, தல்கஸ்வல, கம்பஹா - 02 மற்றும் களுத்துறை - 01 ஆகிய இடங்களில் உள்ள தனது விற்பனை நிலையங்களை நவீனமயமாக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

## 3.4. லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

**i. 2024புலமைப்பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல்கள்( பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்)**

*அட்டவணை இல 3.72024புலமைப்பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல்கள்*

| மாதம் | பல்கலைக்கழகங்களுக்கு ரூ.5,000புலமைப்பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை | ஏனை நிறுவனங்களுக்கு ரூ..2,500புலமைப்பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை | மகபொல நம்பிக்கை நிதியப் பங்களிப்பு (ரூ.) | திறைசேரியின் பங்களிப்பு (ரூ.) | மாதாந்தம் மகபொல புலமைப்பரிசிலுக்கு வழங்கப்படும் மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 19,137 | 3,970 | 59,864,800.00 | 47,211,500.00 | 107,076,300.00 |
| பெப்ரவரி | 38,122 | 580 | 146,713,000.00 | 138,915,000.00 | 285,628,000.00 |
| மார்ச் | 37,477 | 3,568 | 110,392,088.00 | 93,594,900.00 | 203,986,988.00 |
| ஏப்ரல் | 20,228 | 3,472 | 63,442,500.00 | 50,685,600.00 | 114,128,100.00 |
| மே | 23,781 | 3,358 | 62,417,950.00 | 59,843,700.00 | 122,261,650.00 |
| யூன் | 29,695 | 3,434 | 103,726,150.00 | 88,792,900.00 | 192,519,050.00 |
| 1-10 தவணைகள் (2021-22) | 14,537 | - | 352,869,200.00 | 338,313,150.00 | 691,182,350.00 |
| யூலை | 41,327 | 753 | 178,839,850.00 | 169,167,600.00 | 348,007,450.00 |
| ஓகஸ்ட் | 25,422 | 515 | 75,233,050.00 | 70,373,800.00 | 145,606,850.00 |
| செப்ரெம்பர் | 39,562 | 2,489 | 153,352,250.00 | 136,602,200.00 | 289,954,450.00 |
| ஒக்ரோபர் | 42,712 | 2,310 | 144,081,750.00 | 129,271,800.00 | 273,353,550.00 |
| **மொத்தம்** | **332,000** | **24,449** | **1,450,932,588.00** | **1,322,772,150.00** | **2,773,704,738.00** |

ஆதாரம் :லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

**ii. மொத்த புலமைப்பரிசில் வழங்கல் -2018முதல் தற்போது வரை**

*அட்டவணை இல 3.8மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் பற்றிய தகவல்கள்*

| மாணவர்களை உள்ளீர்த்தல் | 2018/19 | 2019/20 | 2020/21 | 2021/22 | 2022/23 | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| பல்கலை மாணவர்கள் | 30830 | 40111 | 41893 | 41607 | 42147 | 196,588 |
| உயர் கல்வித் தொழில்நுட்ப நிறுவன மாணவர் | 1500 | 1500 | 1500 | - | - | 4,500 |
| ஏனைய நிறுவன மாணவர்கள் | 299 | 294 | 343 | 46 | - | 982 |
| **மொத்தம்** | **32,629** | **41,905** | **43,736** | **41,653** | **42,147** | **202,070** |

ஆதாரம் :லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

### iii. பல்கலைக்கழக அனுமதி பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கைக்கும் மகபொல புலமைப்பரிசில் பெற்றோருக்குமிடையான ஒப்பீடு

*அட்டவணை இல 3.9**பல்கலைக்கழக அனுமதி பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கைக்கும் மகபொல புலமைப்பரிசில் பெற்றோருக்குமிடையான ஒப்பீடு***

| வருடம் | 17/18 | 18/19 | 19/20 | 20/21 | 21/22 | 22/23 |
|---|---|---|---|---|---|---|
| பல்கலைகழகங்களுக்கு உள்ளீர்க்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை | 30141 | 30830 | 40111 | 41893 | 41607 | 42147 |
| வருமான எல்லையின் பிரகாரம் (ரூ. 5 இலட்சத்திலும் குறைந்த) தகைமை பெற்ற மாணவர் எண்ணிக்கை | 13461 | 13456 | 14227 | 14255 | 14213 | 15084 |
| மஹாபொல புலமைப்பரிசில் பெறுநர்களின் எண்ணிக்கை | 14961 | 14957 | 15827 | 15855 | 15815 | 16785 |
| வருமான எல்லையின் பிரகாரம் தகைமை பெற்ற மாணவர் எண்ணிக்கை, மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக | 45% | 44% | 36% | 34% | 34% | 36% |
| மஹாபொல பெறுநர்கள் மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக | 50% | 49% | 40% | 38% | 38% | 40% |

ஆதாரம் :லலித் அத்துலத் முதலி மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

## 3.5. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

இலங்கை தராதர அங்கீகார சபையிடமிருந்து தராதர அங்கீகாரம் பெற்றுக்கொண்ட நிறுவனங்களால் வழங்கப்படும் சோதனை அறிக்கைகள் மற்றும் சான்றிதழ்களை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக, எங்கள் நிறுவனத்திற்குஇந்த சர்வதேச தராதர அங்கீகார அமைப்புகளில் உறுப்பினர் நிலையைப் பராமரிப்பதும், அவற்றில் தீவிரமாக பங்களிப்பதும் கட்டாயமானதாகும். இவற்றில், IAFமற்றும் ILACஆகியவற்றின் பரஸ்பர அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரங்கள் பின்வருமாறு:

### i. தராதர அங்கீகாரங்கள் வழங்குதல்

*அட்டவணை இல3.10இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் தராதர அங்கீகாரம் வழங்கல்*

| விடயப்பரப்பு | இரண்டாம் தரம் | மூன்றாம் தரம் | வழங்கப்பட்ட தராதர அங்கீகாரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| IAFபரஸ்பர அங்கீகாரம் | பொருட்கள் சான்றுப்படுத்தல் | ISO/IEC 17065 | 13 |
| | செயற்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தல் நிறுவனங்கள் | ISO/IEC 17029 | 04 |
| | முகாமை முறை சான்றுப்படுத்தல் பற்றிய தராதர அங்கீகாரம் வழங்கல் | ISO/IEC 17021-1 | |
| | உணவுப் பாதுகாப்பு முகாமை முறை | ISO/IEC22000 (FSMS) | 05 |
| | தர முகாமை முறை சான்றுப்படுத்தல் | ISO 9001 (QMS) | 05 |
| | சூழல் முகாமை முறை சான்றுப்படுத்தல் | ISO 14001 (EMS) | 04 |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற் சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமை முறை | ISO 4501 (OHSMS) | 03 |
| | வலு முகாமை முறை | ISO 50001 (EnMs) | 01 |
| ILAC பரஸ்பர அங்கீகாரம் | பரிசோதனை ஆய்வுகூடம் | ISO/IEC 17025 | 124 |
| | மருத்துவ ஆய்வுகூடம் | ISO 15189 | 26 |
| | அளவுத்திருத்த ஆய்வுகூடம் | ISO/IEC 17025 | 17 |
| | ஆய்வு நிறுவனங்கள் | ISO/IEC 17020 | 11 |
| | திறன் பரிசீலனை வழங்கல் நிறுவனங்கள் | ISO/IEC 17043 | 04 |

ஆதாரம் :இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

### ii. 2024.01.01 முதல்2024.12.31 வரை வழங்கப்பட்ட புதிய தராதர அங்கீகாரங்கள்

*அட்டவணை இல 3.11இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 2024 இல் வழங்கிய தராதர அங்கீகாரங்கள்*

| இல | நிறுவனத்தின் பெயர் | விடயப்பரப்பு |
|---|---|---|
| **மருத்துவ ஆய்வுகூடம்** | | |
| 01 | இராணுவ வைத்தியசாலை | நோயியல், சைட்டாலஜி |
| 02 | ஆசிரி ஆய்வுகூடம், ஆசிரி வைத்தியசாலை - மாத்தறை | மருத்துவ உயிர் இரசாயனவியல்/ இரசாயன நோயியல்,<br>இரத்தவியல் மற்றும் மருத்துவ நோயியல் |
| 03 | ஹேமாஸ் வைத்தியசாலை ஆய்வுகூட சேவை - வத்தளை | மருத்துவ உயிர் இரசாயனவியல்/ இரசாயன நோயியல்,<br>இரத்தவியல் மற்றும் மருத்துவ நோயியல்,<br>நுண்ணுயிரியல் |
| **பரிசோதனை ஆய்வுகூடங்கள் மற்றும் அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள்** | | |
| 04 | GSSITM | வெப்பநிலை அளவுத்திருத்தம் |
| 05 | டெக்ஸ்லான் ஆய்வுகூடம் | இரசாயன சோதனைகள் - நூல் மற்றும் காலுறை |
| 06 | தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமை நிறுவனம் | உணவு மற்றும் தானியப் பொருட்களில் இரசாயன மற்றும் இயந்திரவியல் சோதனைகள் |
| 07 | பசிலர் டீ எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட். | தேயிலை பற்றிய இரசாயன மற்றும் இயந்திரவியல் சோதனைகள் |
| 08 | சிலோன் கிரீன் எலிவேற்றர்ஸ் | கோழி இறைச்சிக்கு உயிரியல் பரிசோதனை |
| 09 | பிரெசிசன் தொழில்நுட்ப சர்வதேச (பிரைவேட்) நிறுவனம் | இயக்கவியல், வெப்பநிலை, இடம், நேரம் மற்றும் புள்ளிவிவரங்கள் |
| 10 | புஸ்வெல்லாவா மீட் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் | இறைச்சி மற்றும் விலங்கு தீவனப் பொருட்கள் மீதான உயிர் இரசாயன சோதனைகள் |
| 11 | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | பெற்றோல் உற்பத்தி உராய்வு நீக்கி பற்றிய பரிசோதனை |
| 12 | பியுரோ வெரிடாஸ் நுகர்வோர் சேவைத் தயாரிப்புகள் நிறுவனம் | ஒலி மற்றும் இயந்திர சோதனைகள் |
| 13 | நவெஸ்டா பார்மசி (பிரைவேட்) லிமிடெட். | பார்மசிஉற்பத்தி பற்றிய இரசாயன பரிசோதனை |
| 14 | நீர் வழங்கல் சபை | நீர் பற்றிய இரசாயன பரிசோதனை |

| | | |
|---|---|---|
| 15 | பியுரோ வெரிடாஸ் நுகர்வோர் சேவைத் தயாரிப்புகள் நிறுவனம் | மட்டுப்படுத்தப்பட்ட திரவ பரிசோதனை |
| 16 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | நீர் தொடர்பான இரசாயன சோதனைகள்<br>நுண்ணுயிரியல் சோதனைகள் |
| 17 | அறிவியல் ஆராய்ச்சி நிலையம் | அளவுத்திருத்தம் மற்றும் அது தொடர்பான செயல்பாடுகள் |
| **ஆய்வு நிறுவனங்கள்** | | |
| 18 | தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் | நிலச்சரிவு அபாய மதிப்பீடு |
| 19 | இலங்கை தரக்கட்டளை நிறுவகம் | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பரிசோதனைகள் |
| 20 | டி.சி.ஐ.எஸ் சோதனை லங்கா தனியார் நிறுவனம் | ஏற்றுமதி பரிசோதனைகள் |
| 21 | பியுரோ வெரிடாஸ் நுகர்வோர் சேவைத் தயாரிப்புகள் நிறுவனம் | ஏற்றுமதி பரிசோதனைகள் |
| **உற்பத்தி சான்றுப்படுத்தல் நிறுவனங்கள்** | | |
| 22 | ஏடிசி சர்வதேச நிறுவனம் | வெல்டிங் பொருட்கள் மற்றும் உலோக பொருட்கள் |
| 23 | இன்டெக்ஸ்போ சான்றுப்படுத்தல் நிறுவனம் | நல்ல உற்பத்தி நடைமுறைகள் மற்றும் உணவு விநியோகம் |
| 24 | நஷனல் க்ளீனர் புரடக்சன் சென்ரர் | சுற்றுச்சூழல் லேபல்கள் |
| **முறைமை சான்றுப்படுத்தல் நிறுவனங்கள்** | | |
| 25 | இலங்கை தரக்கட்டளை நிறுவகம் | தொழில்சார் சுகாதார, பாதுகாப்பு முகாமை முறை (தகவல் தொழில்நுட்பம்) |
| 26 | சீசர்ட் தனியார் நிறுவனம் | பாதுகாப்பு ஒழுங்குமுறை- தகவல் தொழில்நுட்பம் |
| 27 | ATC சர்வதேச தனியார் நிறுவனம் | தர முகாமை முறை<br>சுழல் முகாமை முறை<br>தொழில்சார் சுகாதார, பாதுகாப்பு முகாமை முறை |
| **உறுதிப்படுத்தல் மற்றும் சரிபார்த்தல் நிறுவனங்கள்** | | |
| 28 | நஷனல் க்ளீனர் புரடக்சன் சென்ரர் | ISO/IEC17029:2019, ISO/IEC14065:2020 |
| 29 | இகோலன்ஸ் தனியார் நிறுவனம், இந்தியா | ISO/IEC17029:2019, ISO/IEC14065:2020, ISO 14064-2:2019, பசுமை இல்ல வாயு அமைப்புகள் மற்றும் உறுதிப்படுத்தல் மற்றும் சரிபார்ப்புத் தராதர அங்கீகாரத் திட்டங்கள், பிரேரணை மட்டத்தில் |
| 30 | | ISO/IEC17029:2019 உற்பத்திக் கார்பன் தடயங்கள் மற்றும் GHG பற்றிய கூற்றுகளை சரிபார்த்தல் |
| **திறன் பரிசோதனை நிறுவனங்கள்** | | |
| 31 | அளவீட்டலகுகள், தர மற்றும் சேவைகள் திணைக்களம் | இரசாயனப் பரிசோதனை பற்றிய திறன் பரிசோதனையை நடத்துதல் |

ஆதாரம் :இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

2024.01.01 ஆம் திகதி முதல் ஈட்டிய வருமானம் ரூ. 83 மில்லியன் ஆகவும், வெளிநாட்டு ஒத்திசைவு மதிப்பீட்டு நிறுவனங்களால் ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 73மில்லியன் ஆகவும் இருந்தது.

## 3.6. அளவீட்டு அலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

### i. உள்ளூரில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம்

*அட்டவணை இல 3.12 உள்ளூரில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம்*

| வருமான வழிமுறை | | பௌதீக வளர்ச்சி | | வருமானம் (ரூ. மில்.) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | நிறைவேற்றிய அளவு | இலக்கு | உண்மை வருமானம் |
| **எண் திருத்தம்** | | | | | |
| 01 | தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தால் செய்யப்பட்ட திருத்தங்கள் | 1,375 | 1,313 | 4.125 | 6.95 |
| | உள்ளக கணக்கியலில் கணக்கிடப்படாத பெயரளவு வருமானம் | | 79 | | **0.**63 |
| **பதிவு செய்த சான்றிதழ்களை வெளியிடுதல்** | | | | | |
| 02 | பதிவு செய்த சான்றிதழ்கள் வெளியிட்ட அளவு (புதுப்பித்தல், இறக்குமதி செய்து விற்றல், உற்பத்தி செய்து விற்றல் மற்றும் விற்பனை) | 479 | 465 | 1.38 | 1.58 |
| | நடத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | | 8 | | |
| **மாதிரி அங்கீகரித்தல்** | | | | | |
| 03 | மாதிரி அங்கீகாரம் வழங்கிய அளவு | 37 | 52 | 0.46 | 1.28 |
| **அளவுத்திருத்த நிகழ்ச்சித்திட்டம்** | | | | | |
| 04 | அளவுத்திருத்தம் செய்யப்பட்ட அளவீட்டு கருவிகளின் எண்ணிக்கை (தலைமை அலுவலகம்) | 550,000 | 42,257 | 403.33 | 73.89 |
| | சரிபார்க்கப்பட்ட நிறுத்தற் கருவிகளின் எண்ணிக்கை (மாவட்ட அலுவலகங்கள்) | | 344,642 | | 278.47 |
| **சுற்றிவளைப்புகள்** | | | | | |
| 05 | சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை | 12,631 | 36,779 | - | **-** |
| 06 | மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 821 | 11,496 | - | **-** |
| 07 | மேற்கொள்ளப்பட்ட முன்-பொதியிடல்களின் எண்ணிக்கை | 8,250 | 2,865 | - | - |
| **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | |
| 08 | நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை (திட்டமிடப்பட்ட) | 7 | 5 | 0.92 | 2.55 |
| | நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை (கோரிக்கை விடுக்கப்பட்ட) | | 5 | | |

ஆதாரம் :அளவீட்டு அலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

### ii. சர்வதேச உறவுகள் மூலம் ஏற்பட்ட முன்னேற்றம்

அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களமானது, உலகின் முன்னணி விஞ்ஞான அளவியல் நிறுவனமான சர்வதேசநிறைகள் மற்றும் அளவீடுகள் பணியகத்தின் (BIPM) இணை உறுப்பினராகவும், சட்ட அளவியல் பற்றிய சர்வதேச அளவியல் அமைப்பின் (OIML) முழுநேர உறுப்பினராகவும் உள்ளது. மேலும், இதுஅளவியல் தொடர்பான பிராந்திய அமைப்பான ஆசிய பசிபிக் அளவியல் நிகழ்ச்சித்திட்டத்தின் (APMP) முழு உறுப்பினராக உள்ளதுடன், அதன் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரக் குழுக்களின் (DEC) தலைமைப் பொறுப்பு2024 இல் இரண்டாவது ஆண்டாகவும் இலங்கையின் அளவீட்டு தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அத்துடன், அளவீட்டு, தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் விஞ்ஞான சேவையின் நிறைவேற்று அலுவலர்கள் அங்கு நிறுவப்பட்ட பணிக்குழுக்களுக்கு முன்னணி பங்களிப்பை வழங்குகிறார்கள்.

அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் தற்போது பின்வரும் திட்டங்களில் பணியாற்றி வருகிறது:.

**அ) ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு(UNIDO)**

விவசாய உணவுத் துறையின் அபிவிருத்திக்கான தரநிலைகள் சார்ந்த முன்னணி நடைமுறைகளை மாற்றுவதற்கான வேலைத்திட்டம்..

Mainstreaming Standard based best practices for Agri – Food sector development project (BESP).

UNIDO அமைப்பின் புதிய வேலைத்திட்டம் 2023 முதல் 2025 வரை செயற்படுவதுடன், இது இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்த தரமான உட்கட்டமைப்பை வழங்குகிறது. இந்த வேலைத்திட்டத்தில் அளவீடு, தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்பிரதான பங்காளியாக செயல்படுகிறது. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக பயிற்சி, ஆலோசனை சேவைகள், அளவீட்டு மேம்பாடு மற்றும்வெளிநாட்டு உதவியாக தேசிய அளவியல் ஆய்வுகூடத்திற்கு உபகரணங்களும் வழங்கப்படுகிறது.

**ஆ)ஆசியாவில் வளரும் பொருளாதாரங்களை செயற்படுத்த அளவையியலைப் பயன்படுத்துவது குறித்த ஆசிய-பசிபிக் பிராந்திய வேலைத்திட்டம்.**

Metrology – Enabling Developing Economies in Asia (MEDEA)

PTB (ஜெர்மன் தேசிய அளவையியல் நிறுவனம்) வேலைத்திட்டம் ஒன்றான ஆசியாவில் வளரும் பொருளாதாரங்களை செயற்படுத்துவதற்கான MEDEA 3வேலைத்திட்டமானது,2021மே இல் தொடங்கி 2025 வரை செயற்படுகிறது. இந்த வேலைத்திட்டம் இலக்கிற்குரிய பொருளாதாரங்களில் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அளவியலின் பல்வேறு துறைகளில் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் நடவடிக்கைகள் தற்போது ஆசிய பசிபிக் அளவியல் நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் குழுவின் (APMP-DEC) ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் தேசிய அளவியல் ஆய்வுகூடத்திற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலம் உயர்தர சேவையை வழங்குதல்.

2023டிசம்பர் 28 ஆம் திகதி முதல் தற்போது வரை, அளவுத்திருத்த ஆய்வுகூடங்களுக்கான ISO17025:2017தராதர அங்கீகாரம் மூன்று நீள அளவுருக்களுக்கு (கோஜ் புளொக் - 100 மிமீ வரை, அளவிடும் கம்பி - 2000 மிமீ வரை, அடிமட்ட அளவீடு - 2000 மிமீ வரை) பெறப்பட்டுள்ளது. இந்தத் தராதர அங்கீகாரத்தைப் பெற்றவுடன், கைத்தொழில் துறையில் வாடிக்கையாளர் அளவுத்திருத்தங்களில் உள்ள கோஜ் தொகுதிகள் மற்றும் அளவீட்டு கருவிகளுக்கு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ISO 17025: 2017தராதர அங்கீகாரம் பெற்ற அளவுத்திருத்த சான்றிதழ்கள் வழங்கப்படும்.

0 முதல் 25 மிமீ வரையான அளவில் உள்ள வெளியக மைக்ரோமீட்டர்களின் (External micrometer) அளவுத்திருத்தம் தொடர்பான நிபுணர் மீளாய்வுப் பணி நிறைவடைந்துள்ளதுடன், இலங்கை தராதர அங்கீகார சபையால் வழங்கப்படும்ISO 17025:2017தராதர அங்கீகாரத்திற்குஎதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அமுக்க மற்றும் கொள்ளளவு ஆய்வுகூடங்களால் பெறப்பட்ட தராதர அங்கீகாரங்களைஇற்றைப்படுத்திப்பேணுதல்.

இந்தத் திணைக்களத்தின் அமுக்க மற்றும் கொள்ளளவு ஆய்வுகூடங்களுடன் இணைந்து, இன்ஃப்யூஷன் பம்ப்/சிரிஞ்ச் பம்ப் என்ற சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் உபகரணங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்குத் தேவையான முறைகளை உருவாக்கவும், அந்தத் துறைகளுக்கு டிஜிட்டல் மயமாக்கும் வசதிகளை வழங்குவதற்கான செயல்முறையைத் தொடங்கவும் கூட்டாகத் திட்டமிட்டுள்ளன. இந்தப் பணி PTB (Physikalisch Technische Bundesanstalt) - MEDEA (அளவீட்டு ஆய்வு - ஆசியாவில் வளரும் பொருளாதாரங்களை செயல்படுத்துதல்) வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான வளங்களை தாய்லாந்தின் தேசிய அளவியல் ஆய்வுகூடம் வழங்குகிறது..

*அட்டவணை இல3.13அமுக்கம் மற்றும் கன அளவு குறித்து ஆய்வுகூடங்களால் பெறப்பட்ட தராதர அங்கீகாரங்களைப் புதுப்பித்துப்பேணுதல் .*

ஆதாரம் :அளவீட்டு அலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

| ஆய்வுகூடம் | அளவீடு | இடையான ஒப்பீடு |
|---|---|---|
| அளவையியல் பிரிவு | நீளம் பற்றிய அளவீடு | வெர்னியர் கலிபர் மற்றும் டயல் கலிபர் இடையே ஒப்பீடு (உள்ளூர் ஆய்வுகூடங்களுடன்) |
| காற்றமுத்த அளவீட்டு ஆய்வுகூடம் | வாயு அழுத்தம்( 35 bar) | ஜெர்மனியின் தேசிய அளவியல் நிறுவனத்தின் (PTB) அனுசரணையில் மத்திய ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள தேசிய அளவியல் நிறுவனத்துடன் (NMI) நடத்தப்பட்ட இடை ஒப்பீடுகளுக்கான ஒரு முன்னோடி ஆய்வுகூட மற்றும் குறிப்பு பெறுமதிகளை வழங்குதல். அமுக்கவியல் ஆய்வுகூடத்தின் தலைவரும் பிரதிப் பணிப்பாளருமான ஐ.எஸ்.எம். சில்வா, இந்த ஒப்பீட்டுத் திட்டத்திற்கான அளவியல் ஆலோசகராகவும் செயல்படுகிறார். இதில், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், மங்கோலியா மற்றும் ஜார்ஜியா. ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. |
| காற்றமுத்த அளவீட்டு ஆய்வுகூடம் | திரவ அழுத்தம் (1000 bar) | உள்ளூர் டிஜிட்டல் அளவுத்திருத்த ஆய்வுகூடங்களுக்கான இலங்கை தேசிய அளவியல் ஆய்வுகூடம் (NMI) என்ற முறையில் அவர்களின் அமுக்க அளவீட்டு ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல். இதில் சுமார் 11உள்ளூர் டிஜிட்டல் செயலாக்க ஆய்வுகூடங்கள் பங்கேற்றன. இதன் ஊடாக அந்த நிறுவனங்களின் அமுக்க அளவீடுகளின் துல்லியத்தை உறுதிப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. |
| கொள்ளளவு ஆய்வுகூடம் | கொள்ளளவு (20 l, 100 ml) | **APMP.M.FF. K4** கொள்ளளவு பற்றிய இடை ஒப்பீடு சீனாவின் தேசிய அளவியல் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் தலைமையில் தொடங்கப்பட்டுள்ளது. இலங்கையின் தேசிய அளவியல் ஆய்வுகூடம் உட்பட சுமார் 14 நாடுகள் இந்த இடை ஒப்பீட்டில் பங்கேற்கின்றன. |

**iii. வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள்**

2024 நவம்பர் வரை கைத்தொழில் டிஜிட்டல்மயமாக்கல் வருமானம் ரூ.. 6.94 மில்லியன் ஆகவும், உபகரண மாதிரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ரூ. 1.4மில்லியனாகவும் நிறை மற்றும் அளவிடும் கருவிகளின் சரிபார்த்தல் வருமானம் ரூ. 352.25 மில்லியனாகவும் காட்டப்படுகிறது.

## 3.7. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள்

இலங்கையில் பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களை நிறுவுவதற்கான திட்டம் 1998 இல் தொடங்கியதுடன், இதன் முக்கிய நோக்கங்களாவன, கிராமப்புறங்களில் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு ஒரு சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு உத்தியாக நியாயமான விலையை உறுதி செய்வதோடு, பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை எளிதாக உற்பத்தி செய்தல் மற்றும் நாட்டின் நுகர்வோருக்கு நியாயமான விலையில். பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன் நாடு முழுவதும் ஒரு விநியோக வலையமைப்பை நிறுவுதல் என்பனவாகும். தற்போது,பொருளாதார மத்திய நிலையங்களின்சரியான செயல்பாட்டைப் பராமரிக்க தேவையான சட்ட ஆலோசனை, பின்னூட்டல் மற்றும் மதிப்பீடு என்பன வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு.

i. முகாமை அறக்கட்டளைகளுக்கான உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.
ii. பொருளாதார மத்திய நிலைய முகாமை நிதி அறக்கட்டளையை (நம்பிக்கைப் பொறுப்புப் பத்திரம்) நிறுவ நடவடிக்கை எடுத்தல்.

iii. வணிக வளாகங்களை குத்தகைக்கு எடுப்பது தொடர்பாக அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் பொதுவான குத்தகை உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
iv. பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் நில உரிமை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல்.
v. பொருளாதார மத்திய நிலைய முகாமை நம்பிக்கைப் பொறுப்பு அமைப்பை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
vi. பொருளாதார மத்திய நிலையங்களில் அத்தியாவசிய மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 3.7.1 பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களில் நிதி வளர்ச்சி(2024.01.01 - 2024.12.31)

*அட்டவணை இல 3.14பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களில் நிதி வளர்ச்சி*

| தொடரில | பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள் | மொத்த வருமானம் (ரூ.) | மொத்த செலவு (ரூ.) | மிகை/ குறை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | தம்புள்ள | 101,924,209.67 | 42,434,786.88 | 59,489,422.79 |
| 2 | நுவரெலியா | 22,347,993.00 | 1,738, 372.00 | 20,609,621.00 |
| 3 | கெப்பிற்றிபொல(2024.09.30) | 37,245,071.43 | 10,987,401.20 | 26,257,670.23 |
| 4 | தம்புத்தேகம | 36,287,967.00 | 21,139,706.00 | 15,148,261.00 |
| 5 | எம்பிலிபிட்டிய | 38,630,577.63 | 37,981,338.83 | 649,238.80 |
| 6 | மீகொட | 21,536,605.40 | 20,380,617.18 | 1,155,988.22 |
| 7 | வெலிசறை | 18,286,438.35 | 9,276,634.69 | 9,009,803.66 |
| 8 | வெயாங்கொட | 18,020,036.00 | 17,076,205.00 | 943,831.00 |
| 9 | நாரஹேன்பிட்ட | 120,377,600.00 | 60,632,000.00 | 59,745,600.00 |
| 10 | ரத்மலான | 32,737,372.00 | 14,111,515.52 | 18,625,856.48 |
| 11 | பிலியந்தல | 19,736,799.41 | 15,962,621.96 | 3,774,177.45 |
| 12 | கந்தெஹந்திய | 134, 650.00 | 104 , 758.00 | 29,892.00 |
| 13 | குருந்துவத்த(2024.11.30) | 3,800,973.53 | 1,873,139.93 | 1,927,833.60 |
| 14 | அம்பாறை | 943,056.00 | 769,436.00 | 173,620.00 |
| | **மொத்தம்** | **472,009,349.42** | **254,468,533.19** | **217,540,816.23** |

ஆதாரம் :வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, அபிவிருத்திப் பிரிவு

### 3.7.2பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிகளால் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம்

*அட்டவணை இல 3.15பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிகளால் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம்*

| தொடரில | பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள் | அபிவிருத்திப் பணி | மதிப்பிடப்பட்ட நிதி (ரூ.) | பௌதிக வளர்ச்சி % | நிதி வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|
| 1 | நாரஹேன்பிட்ட | மரக்கறித் தோட்ட வடிகால் அமைப்பைச் சரிசெய்தல். | 1,561,802.50 | 100 | 100 |
| | | மோட்டார் சைக்கிள்களுக்கான பார்க்கிங் இடத்தை அமைத்தல். | 1.125,350.20 | 100 | 95 |
| | | மரக்கறி வளாகத்தின் நுழைவு வாயில்களுக்கு மூடப்பட்ட கூரைகளை நிறுவுதல். | 573,429.72 | 100 | 100 |
| | | எம்.டி. இன்ஸ்டிடியூட் அருகே புதிய கேட் அமைத்தல். | 594,400.80 | 100 | 100 |
| | | மரக்கறி வளாகத்தில் மின்சார மீட்டருக்கு பாதுகாப்பு உறை அமைத்தல். | 254,000.00 | 100 | 95 |
| | | ஜவுளி வளாகத்தின் மூடப்பட்ட கூரையைத் தயாரித்தல். | 1,265,402.73 | 100 | 100 |
| | | STC களஞ்சியத்திற்கு அருகில் புதிய வாயிலின் கட்டுமானம். | 349,034.76 | 100 | 100 |
| | | மத்திய நிலையச் சுவரைச் சுற்றி வர்ணம் பூசுதல். | 1,218,118.35 | 100 | 95 |
| | | நாளாந்தக் குப்பைத் தொட்டிக்கதவைப் பழுது பார்த்தல். | 304,367.00 | 100 | 95 |
| | | காய்கறி நிலத்தைச் சுற்றி கொங்கிரீட் அமைத்தல் | 326,506.00 | 100 | 95 |
| 2 | தம்புத்தேகம | பொருளாதார மத்திய நிலையத்தில் ஜெனரேட்டர் அறை மற்றும் பாதுகாப்பு சோதனைச் சாவடியை நிறுவுதல். | 42,031,991.68 | 100 | 30 |
| 3 | எம்பிலிபிட்டிய | கட்டிட நுழைவாயில்களுக்கு இரும்பு வாயில்களை நிறுவுதல் | 2,464,841.30 | 100 | 100 |
| | | பொருளாதார நிலைய உணவகத்தின் புதுப்பித்தல் | 2,942,670.78 | 100 | 100 |
| | | இரண்டு மாடி கட்டிடத்தில் கழிப்பறைகளைப் புதுப்பித்தல். | 746,127.93 | 100 | 100 |
| | | மத்திய நிலையத்தின் முன்பக்கப் படிகளில் டைல்ஸ் பதித்தல் மற்றும் நிலைய அலுவலகத்திற்குள் டைல்ஸ் பதித்தல். | 661,402.86 | 100 | 100 |
| 4 | மீகொட | பொருளாதார நிலையத்தில் உள்ள நீர் தொட்டி பழுதுபார்ப்பு. | 1,362,130.75 | 100 | 90 |
| | | பொருளாதார நிலையத்தில் உள்ள செலான் வங்கி கட்டிடத்தின் சிதிலமடைந்த கூரையை புதுப்பித்தல். | 105,779.75 | 100 | 90 |
| 5 | பிலியந்தல | மின் வயரிங் அமைப்பின் பழுதுபார்த்தல் | 312,258 | 100 | 100 |
| | | இரண்டு பெயர்ப்பலகைகளை சரிசெய்தல் | 100,000 | 100 | 100 |
| | | பொதுமக்கள் கடந்து செல்லும் வணிக வளாகங்களுக்கு இடையே உள்ள நடைபாதையில் வர்ணம் தீட்டுதல். | මේ වන තුරු ගෙවා නැත. | 50 | |
| | | உடைந்த மின்சார மீட்டர் பெட்டிகளை சரிசெய்தல். | 314,840 | 100 | 100 |
| | | மீனிற்கான பலகைக் கட்டிடத்தின் முன் தேவையற்ற கொங்கிரீட் சுவரை இடிக்கும் பணி. | 172,536.10 | 100 | 100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கழிப்பறை அமைப்பு கதவுகளைப் பழுதுபார்த்தல் | | | |
| 6 | வெலிசறை | 2 ஆவது மற்றும் 3 ஆவது கட்டிடங்களின் வளாகத்தின் வெளிப்புற சுவர்களில் வர்ணம் பூசுதல்<br>E. வணிக வளாகம் அமைந்துள்ள கட்டிடத் தளத்தில், தரையில் விரிசல் ஏற்பட்டு உடைந்து போனதால், அந்த இடத்தில் தரையை புனரமைத்தல்.<br>2 ஆம், 3 ஆம் கட்டிடங்களுக்கிடையே உள்ள வடிகால்களில் இருந்து நிரம்பி வழியும் நீரை சீர்செய்தல்.<br>பாழடைந்த பெயர்ப்பலகையை சரிசெய்தல் | 556,215.45<br>157,916.81<br>606,743.34<br>980,000 | 100<br>100<br>100<br>100 | 90<br>100 |
| 7 | ரத்மலான | கூரை ஓடு பழுதுபார்ப்பு<br>மீன் வளாகத்தை களஞ்சிய வளாகமாக மாற்றுதல்.<br>பொருளாதார நிலையத்தில் வலை அமைப்பைப் புதுப்பித்தல்.<br>காவல் நிலையத்தில் கழிப்பறை அமைப்பை பழுது பார்த்தல்.<br>பொருளாதார நிலையத்தில் உள்ள பாழடைந்த வீதிக்கு கார்பற் இடுதல் | 26,200,586.12<br>2,458,536.68<br>2,251,750.24<br>96,264.30<br>9,000,000 | 95<br>100<br>100<br>100<br>100 | 92<br>90<br>90<br>90<br>90 |
| 8 | தம்புள்ள | வங்கி வளாகக் கட்டிடத்தைப் புதுப்பித்தல் | 26,714,124.48 | 0 | 0<br>விலைமனு கோரப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீடு நடைபெற்று வருகிறது.. |

ஆதாரம் :வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, அபிவிருத்திப் பிரிவு

## 3.8. இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

### i. நிறுவனப் பணிகளின் பௌதிக வளர்ச்சி

### (அ) காப்புரிமை (2024.01.01முதல் 2024.11.30வரை)

*அட்டவணை இல 3.16**பௌதிக வளர்ச்சி***

| விடயம் | தேசிய | சர்வதேச | PCT | மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 224 | 07 | 170 | **401** |
| இரண்டாம் நிலை பரிசோதனைக்குப் பின் பதிவு செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை | 27 | 11 | 111 | **149** |
| இரண்டாம் நிலை பரிசோதனைக்குப் பின் பிழைகள் மற்றும் நிராகரிப்புகளின் எண்ணிக்கை | 223 | 13 | 146 | **382** |
| பகிரங்கப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | 28 | 07 | 96 | **131** |
| பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 35 | 06 | 102 | **143** |

ஆதாரம் : இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**(ஆ) கைத்தொழில் வடிவமைப்புகள்(2024.01.01 முதல் 2024.11.30வரை)**

*அட்டவணை இல 3.17* ***கைத்தொழில் வடிவமைப்புகள்***

| விடயம் | தேசிய | சர்வதேச | மொத்தம் |
|---|---|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 159 | 36 | **195** |
| இரண்டாம் நிலை பரிசோதனைக்குப் பின் பதிவு செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை | 42 | 23 | **65** |
| இரண்டாம் நிலை பரிசோதனைக்குப் பின் நிராகரிப்புகளின் எண்ணிக்கை | 61 | 03 | **64** |
| பகிரங்கப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | 49 | 26 | **75** |
| பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 46 | 30 | **76** |

ஆதாரம் : இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**(இ) வர்த்தகச் சின்னங்கள்(2024.01.01 முதல் 2024.11.30 வரை)**

*அட்டவணை இல 3.18* ***வர்த்தகச் சின்னங்கள்***

| | தேசிய | சர்வதேச | மொத்தம் |
|---|---|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 8,157 | 2,846 | **11,003** |
| இரண்டாம் நிலை பரிசோதனைக்குட்பட்ட எண்ணிக்கை | 9,485 | 3,937 | **134,22** |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 6,081 | 4,105 | **10,186** |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2,617 | 467 | **3,084** |
| நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 3,579 | 3,395 | **6,974** |
| பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 3,499 | 3,139 | **6,638** |

ஆதாரம் : இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**ii. 2024 இல் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள்**

**அ) புலமைச் சொத்துக் கோப்புகளை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப பணிகளைத் தொடங்குதல்**

இந்த வேலைத்திட்டம், உலக புலமைச் சொத்து அமைப்புக்கும் இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கும் இடையேபுலமைச் சொத்து அலுவலகத்தின் வணிக சேவைகளின் மேம்பாட்டிற்காக முன்மொழியப்பட்ட இருதரப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் ஒரு இலவச சேவை வசதியாகும். இந்த திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைத் தொடங்க முடிந்தது.

**ஆ) மட்ரிட் அமைப்பு முறையை அணுகுவதற்கான அடிப்படை பணிகளை நிறைவு செய்தல்**

வர்த்தக குறியீடுகளை சர்வதேச ரீதியாகப் பதிவு செய்தலை வசதிப்படுத்தும் மட்ரிட் அமைப்புப் பத்திரத்திற்குள் நுழைதற்காக, புலமைச் சொத்துச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு, உலக புலமைச் சொத்து அமைப்பு மற்றும் சட்ட வரைஞரின் இணக்கப்பாடுடன், சட்டமா

அதிபரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு2024 ஆம் ஆண்டில் முடிந்தது. அதற்கிணங்க,அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

**இ) புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கு வசதியளித்தல்**

இலங்கையில் புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கு எந்த விசேட முறையும் காணப்படவில்லை என்பதுடன், வர்த்தக சின்னங்களின் கீழ் சான்றிதழ் அடையாளமாக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான சட்டத்தை செயற்படுத்த வரைவு செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள் 2024.10.22 ஆம் திகதி அமைச்சரால் கையொப்பமிடப்பட்ட வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டன.

**ஈ) புலமைச் சொத்து தொடர்பான வெளிநாட்டு பயிற்சி, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றுதல்.**

2024 ஆம் ஆண்டில், புலமைச் சொத்து தொடர்பான 12வெளிநாட்டு பயிற்சி, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கு 10நிறுவன அலுவலர்களை அனுப்ப முடிந்தது.

## 3.9. நுகர்வோர் விவகார அதிகாரசபை

### i. 2024 ஜனவரி முதல் டிசம்பர் வரை நிறுவனத்தின் முன்னேற்றம்

*அட்டவணை இல 3.19நுகர்வோர் விவகார அதிகாரசபை செயற்பாடுகளின் முன்னேற்றம்*

| விபரம் | அளவு |
|---|---|
| **நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உதவிச் சேவைகள்** | |
| சந்தைச் சுற்றிவளைப்புகள் | 22,543 |
| வழக்குத் தொடுத்தல் | 22,344 |
| தண்டப்பணம் (ரூபா) | 192,010,999 |
| மாதிரிப் பரிசோதனை | 73 |
| **நுகர்வோர் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்** | |
| பொதுசன விழிப்பூட்டல் | 307 |
| வர்த்தக விழிப்பூட்டல் | 102 |
| பாடசாலைகளில் விழிப்பூட்டல் | 124 |
| கண்காட்சிகள் | 07 |
| நடமாடும் விழிப்பூட்டல்கள் (பொதுசன மற்றும் ர்த்தக) | 367 |
| விசேட விழிப்பூட்டல் | 05 |
| ஊடக வழிப்பூட்டல் நிகழ்ச்சி - இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு | 29 |
| ஊடக விழிப்பூட்டல்- சமூக ஊடகப் பயன்பாடு | 07 |
| **எழுத்து மூலம் பெறப்பட்ட நுகர்வோர் முறைப்பாடுகள்** | |
| புதிதாக முறைப்பாடுகளைப் பெறுதல் | 1,736 |
| நிராகரித்தல், ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்புதல் மற்றும் சுற்றிவளைப்புகள் | 595 |
| **விசாரணைகள்** | 756 |

| | |
|---|---|
| நுகர்வோர் முறைப்பாடு பற்றி நடத்தப்பட்ட விசாரணைகள் 13 மற்றும் 32 ஆம் பிரிவின் பிரகாரம் | 403 |
| விசாரணைகளின் போது முறைப்பாடுகளைத் தீர்த்தல் | 88 |
| கட்டளை வெளியிடுதல்- 13 (4) ஆம் பிரிவின் படி | 135 |
| நீதிமன்ற வழக்குகள் - உத்தரவுகளை செயற்படுத்துதல்- (13(6) மற்றும்32 (7) | 34 |
| சட்ட வலுவாக்கற் பிரிவினால் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்குகள் (அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவுகள் 11,30,31 மற்றும் 57) | 37 |
| வழக்கு விசாரணைகள் உட்பட நீதிமன்ற வருகைகள்,<br>-நீதவான் மன்றம்<br>- உச்ச நீதிமன்றம்<br>- மேல்முறையீட்டு நீதிமன்றம்<br>-<br>- - மாவட்ட நீதிமன்றம் | 407<br>10<br>45<br>10 |
| கூட்டுத் தண்டப்பணத்திற்கு மத்தியஸ்தம் செய்யப்படும் முறைப்பாடுகளின் பெறுமதி (ரூபா) | 340,000 |
| **1977 நுகர்வோர் முறைப்பாட்டு அவசர இலக்கம்(1977 Consumer Hotline)** | |
| மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 2,757 |
| நடவடிக்கை எடுக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1,348 |
| நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1,409 |
| **போட்டித்தன்மையை ஊக்குவித்தல்** | |
| பொருளாதார செறிவைக் கட்டுப்படுத்துதல் அல்லது நீக்குதல் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவித்தல் - போட்டி எதிர்ப்பு மற்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் குறித்த முறைப்பாடுகளை விசாரித்து தலையிடுதல். | |
| - - விசாரணை நடந்து வருகிற | 46 |
| - - கடந்த ஆண்டு பெறப்பட்ட முறைப்பாடுகள் | 25 |
| - 2024 இல் செய்யப்பட்ட முறைப்பாடுகள் | 57 |
| - - தீர்க்கப்பட்ட பிணக்குகள் | 36 |
| அதிகாரசபையின் செயல்பாடுகள் மற்றும் பிற ஒழுங்குமுறைகள் குறித்து வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தல் - போட்டியை மேம்படுத்துவதற்கான ஆலோசனை நிகழ்ச்சிகளை நடத்துதல். | 10 |
| இனங்காணப்பட்ட பொருட்களின் இறக்குமதியைத் தடுத்து வரி/வரிகள் விதிப்பு மூலம் உள்நாட்டு கைத்தொழில் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளிலிருந்து பாதுகாத்தல்.<br>- ஒழுங்குவிதி இல.. 87 (HS குறியீடு 5) செயல்படுத்தல்<br>- - சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அறிவிக்கப்பட்ட/சான்றளிக்கப்பட்ட MRP-ஐ கண்காணித்தல். | 198<br>85 |
| ஆரோக்கியமான சமுதாயத்தை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகளை நடத்துதல்.<br>- சந்தை நுண்ணறிவு ஆய்வுகளை நடத்துதல்<br>- - அறிக்கைகளை வழங்குதல் | 08<br>02 |
| சந்தை மாதிரிப் பரிசோதனைகள் | 09 |
| போட்டி எதிர்ப்பு நடத்தை - சந்தை சுற்றிவளைப்புகள் | 23 |

ஆதாரம் :நுகர்வோர் விவகார அதிகாரசபை

## 3.10. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

### i. சங்க கணக்காய்வின் முன்னேற்றம்

57 சங்கங்கள் கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டதுடன் 57 சங்கங்களின் கணக்காய்வும் நிறைவு பெற்றது. பௌதிக வளர்ச்சி 100% ஆகும்.

### ii. சங்கப் பிரிவின் முன்னேற்றம்

*அட்டவணை இல 3.20 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சங்கப் பிரிவின் முன்னேற்றம்*

| | | |
|---|---|---|
| 1 | புதிய கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல் | 1 |
| 2 | முகாமைப் பலவீனமான கூட்டுறவு சங்கங்களை செயல்படுத்துதல் | 3 |
| 3 | உப சட்டங்களில் திருத்தஞ் செய்தல் | 3 |
| 4 | கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களில் தேர்தல்களை நடத்துதல். | 5 |
| 5 | தேர்தல் முறையற்ற கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களுக்கு தேர்தல் முறையைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதலை வழங்குதல். | 1 |
| 6 | மனிதவலு மதிப்பீட்டில் திருத்தஞ் செய்தல் | 1 |
| 7 | கூட்டுறவு சங்கங்கள்/ ஒன்றியங்களில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல். | 3 |
| 8 | உறுப்பினர் தகவல்களை விசாரித்து பரிந்துரைகளை வழங்குவதற்கான தீர்மானங்களை எடுத்தல். | 163 |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

### iii. சட்டப் பிரிவின் முன்னேற்றம்

*அட்டவணை இல 3.21 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்டப் பிரிவின் முன்னேற்றம்*

| தொடரில | விடயம் | இலக்கிற்குரிய எண்ணிக்கை | செயற்படுத்தல் | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| 01 | தொழிற்சங்கங்களின் வேண்டுகோளின் பேரில் நடுவர்கள் நியமனம். | 37 | 21 | 56% |
| 02 | பங்குதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை | 15 | 03 | 20% |
| 03 | நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான கோரிக்கைகள் | 60 | 55 | 91% |
| 04 | பரிசீலனை மற்றும் விசாரணை அலுவலர்களை நியமித்தல் | 07 | 2 | 28.5% |
| 05 | பதிவு/திருத்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட உப சட்டங்களின் எண்ணிக்கை | 04 | 04 | 100% |
| 06 | திணைக்களத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 05 | 15 | 100% |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

நீதிமன்றத்திலிருந்து திணைக்களத்தால் பெறப்பட்ட தொகை ரூ. 9.18 மில்லியன். பணம் தொழிற்சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது..

**iv. பயிற்சிப் பிரிவு**

10 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டதுடன், அதில் 09 நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவுபெற்றது.

**v. வங்கிப் பிரிவு**

*அட்டவணை இல 3.22 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கிப் பிரிவின் முன்னேற்றம்*

| | | |
|---|---|---|
| **01** | நிரல் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சங்கங்களிலிருந்து நிதி நிலை பகுப்பாய்வு அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல். | 12 |
| | நிதி பகுப்பாய்வு அறிக்கைகளைப் பெற்று பகுப்பாய்வு, மீளாய்வு மற்றும் ஆலோசனைகளை வழங்கிய சங்கங்களின் எண்ணிக்கை | 03 |
| | பௌதிக வளர்ச்சி % | 25 % |
| **02** | வங்கி ஒழுங்குபடுத்தலுக்கான மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துதல். | 03 |
| | நடைபெற்ற வங்கி ஒழுங்குபடுத்தல் மாகாண ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை | 01 |
| | பௌதிக வளர்ச்சி % | 34 % |

ஆதாரம் :கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

**vi. கணக்கீட்டுப் பிரிவு**

பெறுகைத் திட்டங்களை செயற்படுத்தலின் முன்னேற்றம் 100% ஆகும்.

## 3.11. கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

*அட்டவணை இல 3.23 கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான முன்னேற்றம்*

| விடயம் | 2024 இல் பெற்றுக்கொண்ட அளவு | தீர்க்கப்பட்ட அளவு |
|---|---|---|
| மேல்முறையீட்டுத் தீர்ப்புகள் | 81 | 01* |
| ஆலோசனைச் சேவை வழங்கல் | 60 | 03* |
| பணியாளர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு | 85 | 11* |

ஆதாரம் :கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

* ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களின் பதவிக்காலம் 2024.03.03 ஆம் திகதி முடிவடைந்த பின்பும் ஆணைக்குழு நியமிக்கப்படாததால், எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை..

**கூட்டுறவுத் துறையில் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைக்காக கூட்டுறவு பணியாளர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகள்.**

கூட்டுறவுத் துறையில் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைக்காக கூட்டுறவு பணியாளர்களுக்கான 06 விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

*அட்டவணை இல 3.24 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்*

| தொடரில. | பயிற்சிப்பட்டறை நடைபெற்ற சங்கங்கள்/ ஒன்றியங்கள் | பங்குபற்றியோர் | பயிற்சிப்பட்டறையின் விடயம் | செலவுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | இலங்கை தேசிய கூட்டுறவு சபை | 33 | ஒழுக்காற்று நடைமுறை | 26,230.00 |
| 02 | வரைய. இலங்கை சிக்கன மற்றும் கடன் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியம் | 27 | ஒழுக்காற்று நடைமுறை | 20,980.00 |
| 03 | வரைய. தபால் மற்றும் ரெலிகொம் பணியாளர் கூட்டுறவு வங்கிச் சங்கம் | 37 | சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 29,980.00 |
| 04 | வரைய.. கல்விப் பணியாளர்களின் சிக்கன மற்றும் கடன் வழங்கற் சங்கம் - தென் மாகாணம் | 73 | ஒழுக்காற்று நடைமுறை | 70,750.00 |
| 05 | வரைய.. கல்விப் பணியாளர்களின் சிக்கன மற்றும் கடன் வழங்கற் சங்கம் - வடமேல் மாகாணம் | 106 | ஒழுக்காற்று நடைமுறை | 89,620.00 |
| 06 | வரைய. அரச சேவைக் கூட்டுறவு கடன் வழங்கல் மற்றும் சேமிப்புச் சங்கம் | 34 | ஒழுக்காற்று நடைமுறை | 28,360.00 |

ஆதாரம் :கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

## 3.12. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

### i. கற்கைநெறிப் பிரிவு

14 டிப்ளோமா கற்கை நெறிகள், 05 சான்றிதழ்க் கற்கைகள் மற்றும் 46 குறுகிய கால கற்கைநெறிகள் என்பவற்றின் ஊடாக ரூ. 4.2 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டது.

### ii. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அ) வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்

பரீட்சைப் பிரிவு அறிக்கைகள்- 4
கற்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு அறிக்கைகள்- 1
நிர்வாகப் பிரிவு அறிக்கைகள் -03
வதிவிடப் பிரிவு அறிக்கைகள்- 03
நூலகப் பிரிவு அறிக்கைகள்- 01
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு அறிக்கைகள்- 01

ஆ) இந்த ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டங்கள் 03 நடைபெற்றன..

இ) உள்ளகக் கணக்காய்வின் 04 காலாண்டு மதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஈ) NA 6537 ஆம் இலக்க வாகனத்தின் ஓட்டக் குறிப்பில் அது தொடர்பாக வழங்கப்பட்ட விலைப்பட்டியல்களில் உள்ள ஓட்டத் தூரத்தில் உள்ள முரண்பாடுகள் குறித்த அறிக்கையொன்றைத் தயாரித்தல்..

உ) இந்த நிறுவனத்தின் உள்ளக விரிவுரையாளர்களின் விரிவுரை நேரம் மற்றும் தொடர்புடைய கொடுப்பனவுகள் தொடர்பாக முகாமை சபையால் நியமிக்கப்பட்ட குழுவின் குழு உறுப்பினராகச் செயல்படுதல்.

ஊ) முகாமை சபையின் தீர்மானத்தின் மீது கேட்போர்கூட நிர்மாணிப்புக்குரிய கொடுப்பனவு தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு அது பற்றிய விரிவான அறிக்கையை வழங்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட குழுவின் குழு உறுப்பினர் ஒருவராக நடவடிக்கை எடுத்தல்.

எ) முகாமை சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பணியாளர்களின் மாதாந்த சம்பளம், மேலதிக நேர கொடுப்பனவுகள், விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் சம்பளங்களை SLIPS முறையின் மூலம் வங்கியிலிடலை மேற்பார்வை செய்தல்..

**iii.** நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

*அட்டவணை இல 3.25 தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்*

| பணி | முன்னேற்றம் |
|---|---|
| சர்வதேச கூட்டுறவுத் தின நிறுவனம்சார் நிகழ்ச்சித்திட்டம் | சர்வதேச கூட்டுறவு தினத்தைக் குறிக்கும் வகையில், நிறுவனத்தின் மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் முதல் முறையாக ஒரு ஆராய்ச்சி மாநாடு 2024.07.26 ஆம் திகதி நடைபெற்றது. |
| நூல் வெளியீடுகள் | கூட்டுறவுக் கிராமிய வங்கி இயக்கத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் ஶ்ரீதர வின்சென்ட் சுபசிங்கவின் 118 ஆவது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் கருப்பொருளோடு, 102 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்துக்கு இணைவாக புதிய பிரவேச இதழ் ஒன்றும் வெளியிடப்பட்டது. |
| பணியாளர் பயிற்சி | இந்த நிறுவனம் ஒரு கல்வி நிறுவனம் என்பதால், குறிப்பாக ஆசிரியர்களின் அறிவை இற்றைப்படுத்துதல் அவசியமாக உள்ளது. எனவே, பணியாளர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்க அங்கீகாரத்தைக் கோரி வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் மற்றும் அமைச்சுச் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் அறிவுறுத்தல்களை மீறி, பயிற்சிக்கான நிறுவன நிதியை ஒதுக்கீடு செய்வதை அங்கீகரிக்க இயலாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. |
| பணியாளர் மதிப்பீடு | தற்போது இடைத் தவணை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. |
| பணியாளர் நலன் மற்றும் சமூகப் பொறுப்பு பற்றிய பணிகளை மேற்கொள்ளல். | வெசாக் பண்டிகையை முன்னிட்டு நிறுவன அலுவலர்களின் ஆதரவுடன் மரவள்ளிக்கிழங்கு தானசாலை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.<br>நிறுவன அலுவலர்களின் பங்களிப்புடன், டிப்ளோமா பட்டதாரிகளால் நிறுவன வளாகத்திற்குள் இரத்த தான முகாம் ஒன்றும் நடத்தப்பட்டது.<br>அலுவலர்களிற்கு பற் சிகிச்சை நிலையம் ஒன்று சுதந்த நிறுவனத்தால் 2024.11.21 ஆம் திகதி நிறுவன வளாகத்தில் இலவசமாக நடத்தப்பட்டது. |
| முகாமை சபை நடவடிக்கைகள் | தற்போது, 08 முகாமை சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. |
| கற்கை சபை நடவடிக்கைகள் | தற்போது, 01 கற்கை சபைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. |

ஆதாரம் :தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

## 3.13. வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (நானாவித) சட்டரீதியான கூட்டுத்தானம்

### i. வருமானம் மற்றும் நிகர இலாபம்

2024 இல் ரூ. 8.18 பில்லியன் வருவாயை ஈட்டியதாக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன்,

இவ்வருடத்தில் பெறப்பட்ட நிகர இலாபம் ரூ. 986 மில்லியனாகும்.

### ii. வரி செலுத்த முந்திய இலாபம்

**கூட்டுத்தாபனம் 2024 இல் வரி செலுத்த முந்திய இலாபமாக ரூ. 455 மில்லியனை பெற்றுள்ளது.**

### iii. 2024 இல் விசேட நடவடிக்கைகள்

**அ) உற்பத்திப் பிரிவை விரிவுபடுத்தல்**

இலங்கை அரசு வர்த்தக நானாவித சட்டரீதியான கூட்டுத்தாபனம், நுகர்வோர் சந்தையில் விநியோகம் மற்றும் விலையை நிர்ணயம் செய்ய வேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நுகர்வோர் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிப்பவராக

செயல்படுகிறது. அதன்படி, அரிசி மற்றும் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது, நிரல் அமைச்சான வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், லங்கா சதோச விற்பனை நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காகத் தேவையான இருப்புக்களை இறக்குமதி செய்வதன் மூலம் நிலைமை சிறப்பாக நிர்வகிக்கப்பட்டது. மேலும், சந்தையில் உழுத்தம் பருப்பு பற்றாக்குறையை நிர்வகிக்க, உளுத்தம் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

அரசாங்க அறிவுறுத்தல்களின்படி, மஞ்சள் கோதுமை இறக்குமதி செய்யப்பட்டு கால்நடை தீவனமாக விநியோகிக்கப்பட்டது.

அரசாங்க ஆதரவுடன், கல்வி அமைச்சுக்காக பாடசாலைச் சீருடைத் துணிகள் இறக்குமதி செய்யப்பட்டதுடன், இலங்கை இராணுவத்திற்காக சீருடை துணிகளும் இறக்குமதி செய்யப்பட்டன.

2024 இல் ஸ்மார்ட் பலகைகளின் மேம்பாடு ஆரம்பிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டதுடன், இது கூட்டுத்தாபனத்தின் தகவல் தொழில்நுட்பத் தயாரிப்புப் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஒரு புதிய வெளியீடாகும்.

**ஆ) பணியாளர் அபிவிருத்தி**

செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக பணியாளர்கள் மற்றும் தொழில்சார் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்டதுடன், 2024 மார்ச் அளவில் கூட்டுத்தாபனம் 300 பணியாளர்களைக் கொண்டிருந்தது.

**இ) உபாயத்திறன் முன்னெடுப்புகள்**

புதிய உற்பத்திகளை இனங்காணலின் ஊடாக உற்பத்தித் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய உற்பத்தி வருமானத்தை உயர்த்தும் பொருட்டு விற்பனை நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

**ஈ) நிர்வாகம் மற்றும் இணக்கப்பாடு**

2023/2024 வருடத்தில் 13 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## 3.14. உணவு ஆணையாளர் திணைக்களம்

**தம்புள்ள வெப்பநிலை கட்டுப்படுத்தற் களஞ்சியத் தொகுதியை நிர்மாணித்தல்**

இந்த வேலைத்திட்டத்தின் 98% நிர்மாணப் பணிகள் தற்பொழுது நிறைவடைந்துள்ளன. இந்த வேலைத்திட்டம் அமைந்துள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கையகப்படுத்துவதற்காக, அந்த அதிகாரசபையால் காணி அபிவிருத்தி பொருட்டான செலவாக ரூ. 21.4 மில்லியன் தொகைக்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதுடன், காணி கையகப்படுத்தற் செயல்முறை நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் முகாமை மற்றும் செயல்பாடுகள் ஒரு முகாமை சபையால் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அந்த முகாமை சபை, அரச-தனியார் கூட்டாண்மையின் கீழ் களஞ்சித் தொகுதியின் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டத்தின் நிர்மாண, முகாமை மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக, ரூ. 382 மில்லியன் தேவைப்படுகிறது..

## 3.15. கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்

இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளில் தனியார் கம்பனிகள், பொது நிறுவனங்கள், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள், வரையறுக்கப்படாத கம்பனிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளை கூட்டிணைத்தல், வெளிநாட்டுக் கம்பனிகள் மற்றும் கரையோர நிறுவனங்கள், சங்கங்கள், பொது ஒப்பந்தங்கள், அடமானப் பத்திரங்கள், தொகுதிக்கடன் பத்திரங்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் கம்பனி செயலாளர்களைப் பதிவு செய்தல், கம்பனிகள் சட்டம் மற்றும் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்படி கம்பனிகள் மற்றும் சங்கங்களின் தகவல்கள் தொடர்பான

ஆவணங்களைப் பதிவு செய்தல், கம்பனிகளைக் கலைத்தல், கம்பனிகள்/ சங்கங்கள் தொடர்பான சகல தகவல்களையும் இற்றைப்படுத்தல் ஆகியவை அடங்கும்.


சான்றிதழ்களின் பிரதிகளை வழங்குதல், பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல், ஆவணங்களைச் சரிபார்த்தல், கட்டணங்களைச் சேகரித்து ஒப்பிட்டுப் பார்த்தல், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குத் தேவையான தகவல் சான்றிதழ்களின் பிரதிகளை வழங்குதல் மற்றும் தேவையான உதவிகளை வழங்குதல் ஆகியவையும் இதில் அடங்கும்

**கம்பனிகளின் பெயர்களை அங்கீகரித்தல்**

*அட்டவணை இல 3.26 கம்பனிகளின் பெயர்களை அங்கீகரித்தல்*

| | |
|---|---|
| பெயர்களை அங்கீகரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 38,909 |
| அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 36,137 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1,948 |

ஆதாரம் :கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்





**கூட்டிணைக்கப்பட்ட புதிய கம்பனிகளின் எண்ணிக்கை 25,076**

**கலைக்கப்பட்ட மற்றும் ரத்துச்செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை**

*அட்டவணை இல 3.27 கலைக்கப்பட்ட மற்றும் ரத்துச் செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை*

| விபரம் | 2024.01.01 முதல் 2024.11.30 வரை |
|---|---|
| உறுப்பினர்களின் தன்னார்வ கலைப்பு | 48 |
| கடன் உரித்துடையோரின் தன்னார்வக் கலைப்பு | 08 |
| நீதிமன்றத்தால் கலைக்கப்படல் | 07 |
| 394 ஆம் சட்டத்தின் கீழ் பெயர்கள் வெட்டி நீக்கப்படல் | 326 |
| ஒருங்கிணைப்பு காரணமாக பெயர்கள் வெட்டி நீக்கப்படல் | 58 |
| வெளிநாட்டுக் கம்பனிகளின் பெயர் வெட்டி நீக்கப்படல் | 14 |
| மொத்தம் | 461 |

ஆதாரம் :கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்




ஆதாரம் :கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்

**2024.01.01 முதல் 2024.11.30 வரை பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களின் எண்ணிக்கை 38**

*அட்டவணை இல 3.28 பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள்*

| சங்கங்களின் வகை | 2024.01.01 முதல் 2024.11.30 வரை |
|---|---|
| விகாரைகள் | 1 |
| நலன்புரிச் சங்கங்கள் | 37 |
| மொத்தம் | **38** |

ஆதாரம் :கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்

# நான்காம் அத்தியாயம்

# 2025 – எதிர்காலத் திட்டங்கள்

## 04. 2025 - எதிர்காலத் திட்டங்கள்

### 4.1. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

i. அனுராதபுரம் மாவட்டத்தில் 2 வருடங்களுக்குள் ரூ. 10 பில்லியன் முதலீட்டில் அதிநவீன உபகரணங்களுடன் கூடிய பெரிய அளவிலான அரிசி ஆலை ஒன்று நிறுவப்படுதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ii. உணவுப் பாதுகாப்பு மற்றும் பெண்கள் தொழில்முனைவோர் வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ், ரூ. 200 மில்லியன் செலவில், சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி உற்பத்தி வேலைத்திட்டம், அஸ்வசும நன்மை பெறும் பெண்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட விவசாய அமைப்புகளால் செயல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

iii. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான களஞ்சியத் தொகுதிகளின் கூரைகளில் சூரிய மின் பலகை வேலைத்திட்டங்களை நிறுவ நடவடிக்கை எடுத்தல்.

iv. 2018 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுச் சட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் சட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டிருந்தாலும், உற்பத்திப் பொருளாதாரத்தின் மேம்பாடு குறித்த ஒழுங்குவிதிகள் வெளியிடல் குறித்து உலக வர்த்தக அமைப்புக்கு அறிவித்தல் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தில் ஒரு தனியான பிரிவை நிறுவுதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

v. சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை நிர்வகிக்க விரிவான சட்டபூர்வ சட்டம் ஒன்று இல்லாததால், ஏற்றுமதி உற்பத்திக் கைத்தொழில்கள், பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மற்றும் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கான சட்டக் கொள்கைக் கட்டமைப்புடன் கூடிய சர்வதேச வர்த்தகச் சட்டம் ஒன்றை உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது.

vi. வணிகப் பங்குகளின் நன்மையாளர்களைப் பதிவு செய்வதை வசதிப்படுத்துதற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தைத் திருத்தஞ்செய்தல்.

vii. இலங்கையில் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமைக்கு ஏற்ப நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கவும், உள்ளக வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துதல்..

### 4.2. வர்த்தகத் திணைக்களம்

i. இந்த ஆண்டில், பிராந்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

ii. வர்த்தக மேம்பாட்டிற்காக, 'USA/CLDP' இன் கீழ் சர்வதேச வர்த்தக மத்திய நிலையம் கூடுதலான ஆதரவைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

iii. தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதி கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டு கொள்வனவாளர்களின் பங்கேற்புடன் இலங்கையில் மூன்று B2B ஊக்குவிப்புத் திட்டங்களை ஏற்பாடு செய்ய வர்த்தகத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இந்த வேலைத்திட்டம் கைத்தொழில் அமைச்சு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேசிய வர்த்தக சபை மற்றும் ஏனைய அரச மற்றும் தனியார் துறைப் பங்குதாரர்களுடன் இணைந்து மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

iv. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகள்/ கட்டளைகளின்படி, வர்த்தகத் திணைக்களம் பலதரப்பு, பிராந்திய மற்றும் இருதரப்பு மட்டங்களில் வர்த்தக கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல்.

### 4.3. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

**I.** புதிதாக 150 லங்கா சதொச விற்பனை நிலையங்களைத் திறத்தல்.

விற்பனை நிலைய வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிப்பதும், திறன் பொருளாதாரக் கோட்பாட்டின் படி, கொள்வனவுப் பேரம் மற்றும் விநியோக செலவு முகாமை ஊடாக வாடிக்கையாளருடன் நெருக்கமாக இருப்பதும் வாடிக்கையாளருக்கு மிகக் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதும் இதன் நோக்கமாகும்.

II. புதிய ஒருங்கிணைந்த நிறுவன வள திட்டமிடல் (ERP) முறையை நிறுவுதல்.

போட்டி நிறைந்த நவீன வர்த்தகத் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் லங்கா சதொசவிற்கு மிகவும் நம்பகமான மற்றும் திறமையான ஒருங்கிணைந்த நிறுவன வள திட்டமிடல் முறைமை அவசியமாகும்.

காலத்தோடொத்த முகாமைத் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு சகல விற்பனை நிலையங்கள், களஞ்சியங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தை இணைக்கும் ஒரு புதிய வளத் திட்டமிடல் முறையை நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது.
இதனால் பெறுகைச் செயன்முறையை முறைமைப்படுத்துவதன் ஊடாக, அதிகப்படியான மற்றும் குறைவான இருப்பு சூழ்நிலைகளைத் தவிர்க்கவும், இருப்பு வருமானத்தை பூஜ்ஜியமாக அல்லது குறைந்தபட்ச அளவிற்குக் குறைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

III. திறன்களைக் கொண்ட தகுதிவாய்ந்த பணியாளர்களைப் பணியமர்த்தல்.
2024 ஆம் ஆண்டில் திறமையான, அமைய அடிப்படையிலான ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக நியமிப்பதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பதன் ஊடாக நிறுவனத்தில் ஏற்படும் நேர்மறையான நிதிசார் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

IV. விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்வனவு
விவசாயிக்கு சரியான சந்தையொன்று உருவாக்கப்படுவதுடன், இடைத்தரகர்கள் இல்லாது நுகர்வோருக்கு மிகக் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

V. மேலதிக வருமான வளர்ச்சி
போட்டி நிறைந்த சந்தையில் செயல்படுவதால், எங்கள் நிறுவனத்தின் லாபத்திற்கான ஒரே பாதை மேலதிக வருமான வளர்ச்சியே ஆகும்.

VI. சகல விற்பனை நிலையங்களிலும் விசேட கணக்காய்வு நடத்தி, புதிய வாய்ப்புகளை இனங்கண்டு, விலைகளை மீள் மதிப்பீடு செய்து அதிகரிப்பதன் மூலம் அதன் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.
மேலும், பிரதான வழங்குனர்களுடன் கூட்டு வணிகத் திட்டங்களை மீண்டும் தொடங்குவதன் மூலம் மேலதிக வருமான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

VII. நிகர லாப எல்லையை மேம்படுத்தல்.
வழங்குனர்களுடன் பேரம் பேசுவதன் ஊடாக மொத்த லாப வரம்பை அதிகரிப்பதன் மூலம் முழுமொத்த லாபத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது..

### 4.4. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

i. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் மறுசீரமைக்கப்பட்டு புதிய வெட்டுமுகத்துடன் புதிதாக மொத்த வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் சதோசவிற்குச் சொந்தமான 10 களஞ்சியசாலைகளைப் புனரமைத்தல்.

ii. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்குச் சொந்தமான ஹிங்குராக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி ஆலைகளைப் புதுப்பித்து, அவற்றை மீள முறையாகச் செயற்படுத்துதல்.

iii. அத்தியாவசிய பொருட்களின் மொத்த விற்பனைக்காக கூட்டுறவு மொத்த விற்பனை வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் 03 மொத்த விற்பனை நிலையங்களை கொழும்பு, மாத்தறை மற்றும் குருநாகலில் ஆரம்பித்தல்.

iv. நெல் சந்தைப்படுத்தல் சபை, கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் மற்றும் கூட்டுறவு இயக்கம் ஆகியவை இணைந்து நாடு முழுவதிலும் நெல்லைக் கொள்வனவு செய்து அதிகபட்சமாக 300,000 மெட்ரிக் தொன் நெல் வரை களஞ்சியப்படுத்தல். இந்த நோக்கத்திற்குத் தேவையான களஞ்சிய வசதிகளைப் பெறும் பொருட்டு, தற்போதுள்ள களஞ்சியங்களைப் புதுப்பிப்பதற்கு ரூ. 50 மில்லியன் ஒதுக்கீடு செய்தல்.

v. சதோச போக்குவரத்து சேவை, பாதுகாப்பு சேவை மற்றும் பொறியியல் ஆகிய உப நிறுவனங்களின் வணிக நடவடிக்கைகளை புதிய வெட்டுமுகத்துடன் அவற்றின் வியாபார நடவடிக்கைகளை நெறிப்படுத்தி பராமரித்தல் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தை மீள ஆரம்பித்தல்.

vi. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தால், அத்தியாவசிய உணவுப் பொருட்களை நேரடியாக இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

vii. 2025 ஆம் ஆண்டில் 150 புதிய லங்கா சதோச விற்பனை நிலையங்களை விற்பனை வலையமைப்பில் சேர்ப்பதன் மூலமும், தற்போதுள்ள 448 விற்பனை நிலையங்களை 03 ஆண்டுகளுக்குள் 1000 ஆக விரிவுபடுத்துவதன் மூலமும், மொத்தமாக பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கான இயலுமையைப் பெறுதல்.

viii. கூட்டுறவு வலையமைப்பிற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து நியாயமான விலையில் வழங்குவதன் மூலம் சந்தை விலைகளை நிர்வகிப்பதற்கான இயலுமையைப் பெறுதல்.

**4.5. லலித் அதுலத் மகபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**

i. இவ்வருடத்தில் 2022/2023 கல்வி வருட 17,000 மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் தவணை முறையில் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

ii. மகபொல புலமைப்பரிசில் நூலகத்தை இணைய வழியில் ஆரம்பித்தல்.

iii. மாதாந்த மகபொல புலமைப்பரிசில் தொகையை ரூ. 5,000 இலிருந்து ரூ. 7,500 ஆக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதால், நிதியத்தின் மற்றும் பிரேரணைத்திட்டத்தின் நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக மகபொல புலமைப்பரிசில் நிதிக்கான வளங்களைத் திரட்ட முன்மொழியப்பட்டுள்ளது. இதற்காக, இணையவழி மகாபொல லொத்தர் உத்தேசத் திட்டத்தை செயற்படுத்தல் மற்றும் மகபொல புலமைப்பரிசில்களைக் கடந்த காலத்தில் பெற்றவர்கள் மகாபொல புலமைப்பரிசில் நிதிக்கு பங்களிக்கக்கூடிய வகையில் மகாபொல பழைய மாணவர் சங்கத்தினை நிறுவுதல்.

**4.6. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB)**

**i. தராதர அங்கீகாரச் செயன்முறையை டிஜிட்டல் மயமாக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, ஏற்கனவே பரிசோதனை ஆய்வுகூட தராதர அங்கீகார உத்தேசத் திட்டப் பணிப்பாய்வின் டிஜிட்டல் மயமாக்கலை பூர்த்தி செய்து செயல்படுத்தியுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்குள் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையால் செயல்படுத்தப்படும் ஏனைய அனைத்து தராதர அங்கீகாரத் திட்டங்களுக்கும் டிஜிட்டல் மயமாக்கல் பணிப்பாய்வை செயற்படுத்த சபை திட்டமிட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் சேவை வழங்கலின் செயல்திறனை மேம்படுத்தவும் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைக்கவும் திட்டமிட்டுள்ளது.

ii. **தராதர அங்கீகாரத்திற்கான மேம்பாடு மற்றும் தரத்தை இனங்காணுதல்**.

அதன் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, தராதர அங்கீகாரத்திற்கான மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. பொது மக்கள், ஒழுங்குபடுத்துனர்கள், ஒத்திசைவு மதிப்பீட்டு நிறுவனங்கள், தொடர்புடைய அரச நிறுவனங்கள் போன்றவற்றை இலக்காகக் கொண்டு ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

iii. **புதிய தராதர அங்கீகார நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தால் வழங்கப்படும் தராதர அங்கீகார சேவைகளை மேலும் விரிவுபடுத்துதல்**.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் 2025 ஆம் ஆண்டில் ISO/IEC 17034 (மூலப் பொருள் உற்பத்தியாளர்கள்) மற்றும் பயோபேங்கிங் (ISO 20387) ஆகியவற்றிற்கான புதிய தராதர அங்கீகாரத் திட்டங்களை செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தராதர அங்கீகார உத்தேசத்திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**iv. திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்**

இந்த ஆண்டில் திட்டமிடப்பட்ட பயிற்சி நாட்காட்டிக்கு மேலதிகமாக, இலக்கிற்குரிய வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பங்கேற்பாளர்களுக்கான பல்வேறு தராதர அங்கீகார உத்தேசத் திட்டங்கள் குறித்த அறிவை மேம்படுத்துதற்காக விசேட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய உத்தேசத்திட்டங்களுக்கான சேவைபெறுநர் தளத்தை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தும்.

**v. தேசிய தரநிர்ணய சபையினை அமைத்தல்**

தேசிய தரக் கொள்கையின்படி அரச துறை நிறுவனங்களில் தரமான எண்ணக்கருக்கள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்தி மேம்படுத்துவதற்காக தேசிய தரக் கவுன்சிலை நிறுவுவதற்கு 24/1148/627/021 ஆம் இலக்க மற்றும் 2024.07.10 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

## 4.7. அளவீட்டு அலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

i.தேசிய அளவியல் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தில் மையப்படுத்தப்பட்ட வளிச்சீராக்கி முறைமைகளை நிறுவுதல். - 1 ஆம் கட்டத்திற்காக அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் நிதியத்திலிருந்து ரூ. 555 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii.சக்தி, ஒலி மற்றும் கன அளவுப் பாய்ச்சலிற்கான புதிய அளவீட்டு தரநிலைகளை நிறுவுவதன் மூலம் தேசிய அளவியல் ஆய்வுகூடத்தின் பணியினை விரிவுபடுத்துதல்

iii.திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவில் அளவியல் பாடநெறிக்கான NVQ மட்டம் VI அங்கீகாரம் பெற்ற தொழிற்கல்விப் பயிற்சியை வழங்குவதற்காக மேம்படுத்துதல். - மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 490,800 ஆகும்.

iv.பல்கலைக்கழகக் கல்வியில் அளவியல் பாடத்தை ஒரு பாடமாகச் சேர்க்க ஏற்பாடுகளைச் செய்தல். கொழும்பு பல்கலைக்கழகம் - பாடநெறி - IA - 4301 - Precision Measurement techniques and calibration of instruments

வவுனியா பல்கலைக்கழகம் - பாடநெறி - EN 541 (II)3 Metrology பாடநெறி

v.அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளை இற்றைப்படுத்துதல்.

vi.அளவீட்டு தரநிலை முகாமைத் தகவல் முறைமையொன்றைத் தயாரித்தல். - மதிப்பிடப்பட்ட செலவு ரூ.70 மில்லியன் ஆகும். அதில் 25 மாவட்ட அலுவலகங்களை தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைத்தலும், வர்த்தக தரவுத் தளத்தை தயாரிப்பதன் மூலம் நுகர்வோருக்கு துல்லியமான மற்றும் நம்பகமான நிறை மற்றும் அளவீட்டு சேவையை உறுதி செய்தலும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேலைத்திட்டங்களை நிறுவன நிதியுடன் செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.8. பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள்

பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களை மிகவும் பயனுறுதி மிக்கதாக செயற்படுத்துவதற்கு கொரிய உதவியுடன் பணியாற்றுதல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பொருளாதார மத்திய நிலையங்களில் உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் பழங்களை களஞ்சியப்படுத்துவதற்காக 05 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வெப்பநிலை கட்டுப்பாட்டு களஞ்சியங்களை நிர்மாணித்தல்.

## 4.9. இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

i. இணையவழி கொடுப்பனவு முறைமை மற்றும் இணையவழி விண்ணப்பச் சமர்ப்பிப்பு வசதிகளை திட்டமிடுதல்.

ii. புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதை வசதிப்படுத்தல்.

iii. மட்ரிட் நெறிமுறைக்கு இணங்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தைத் திருத்தஞ் செய்தல்

iv. சரியான ஒழுங்குமுறைப்படி புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிகளை மேற்கொள்ளல்.

v. தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் மென்பொருள் முறையான கைத்தொழில் சொத்து நிர்வாக முறையை (IPAS) அதன் நான்காவது மட்டத்துக்கு மேம்படுத்துதல்.

vi. இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தின் செயல்பாடுகளை வினைத்திறனுடனும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வதற்கான டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்தை உலக புலமைச் சொத்து அலுவலகத்தின் (WIPO) நிதியைப் பயன்படுத்திச் செயற்படுத்துதல் மற்றும் புலமைச் சொத்துக் கொள்கை ஒன்றைத் தயாரித்தல்..

## 4.10. நுகர்வோர் விவகார அதிகாரசபை

1) நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்
நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க பின்வரும் ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2) கொள்வனவு செய்த பொருட்களின் செலவு மற்றும் வரிக்கூறுகளை தனித்தனியாக இனங்காண, நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு இயந்திரத்தால் அச்சிடப்பட்ட விலைப்பட்டியல்களை கட்டாயமாக வழங்குவதை ஒழுங்குபடுத்துதல்.
இந்த நோக்கத்திற்காக, சகல பெறுமதியையும் கூட்டி வரி பதிவுசெய்யப்பட்ட வியாபார அல்லது வர்த்தக நிறுவனங்கள் விற்பனைப் புள்ளி (PoS) இயந்திரத்தை நிறுவி, கொள்வனவு செய்த பொருட்களின் செலவு, வரி மற்றும் ஏனைய கட்டணங்களுடன் சேர்த்து இயந்திரத்தால்

உருவாக்கப்பட்ட விலைப்பட்டியலை நுகர்வோருக்கு தனித்தனியாக வழங்குதலை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.
வாடிக்கையாளர் ஒருவர் தமது இலத்திரனியல் கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்தும்போது, விலைப்பட்டியல் தொகைக்கு மேலதிகமாக, பல வர்த்தக நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் விலைப்பட்டியல் மதிப்பில் 1.5% முதல் 3% வரை கட்டணம் அறவிடுவதால், இந்த வகையான பயன்பாடு டிஜிட்டல் கட்டண முறையை சீர்குலைக்கிறது. எனவே, இதுபோன்ற அங்கீகரிக்கப்படாத கட்டணங்கள் அல்லது நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணங்களை ஒழுங்குபடுத்த முன்மொழியப்பட்டுள்ளது.
மேற்கூறிய சிக்கல்களிலிருந்து நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவை பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கும்.

3) நுகர்வோர் விவகார அதிகாரசபையின் செயல்பாடுகளை மிகவும் வசதியாக மாற்றுவதன் மூலம் நுகர்வோருக்கு உகந்த சேவையை வழங்கும் நோக்கத்துடன், சபை நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக, நிறுவன நிதியிலிருந்து ரூ. 140 மில்லியன் செலவில் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துதல்..

## 4.11. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

i. புதிய அரசின் கொள்கைப் பிரகடனத்தை செயற்படுத்தி 1000 உற்பத்திக் கூட்டுறவுகளை நிறுவுவதற்கான திட்டத்தை சகல பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கி ஆரம்பித்தல்
ii. ரூ. 25 மில்லியன் முதலீட்டில் கைத்தறி மற்றும் வலு இயந்திர நெசவு, உலர் மீன் உற்பத்தி, காளான் உற்பத்தி மற்றும் நெல் வங்கி நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்.
iii. ஒருங்கிணைந்த நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்.
iv. கூட்டுறவுச் சட்டத்தை (1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) திருத்தம் செய்தல்

## 4.12. கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு

i. கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சம்பளத் திருத்தம் ஒன்றை செயல்வலுப்படுத்தல்
ii. கூட்டுறவு பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
iii. கூட்டுறவு பணியாளர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளை இற்றைப்படுத்தி செயல்படுத்துதல்.
iv. ஒழுக்காற்று நடைமுறையை இற்றைப்படுத்தி, அதை தற்காலத்திற்கு ஏற்றதாகத் தயாரித்தல்..

## 4.13. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

i. 04 ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள், 01 வழமையான பயிற்சிப் பாடநெறி, 08 டிப்ளோமா பாடநெறிகள், 04 சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் 45 குறுகிய கால பாடநெறிகள் என்பவற்றை மொத்தமாக 1825 பங்கேற்பாளர்களுடன் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
ii. நிறுவனத்தால் நடத்தப்படும் சகல டிப்ளோமா கற்கைகளின் பாட உள்ளடக்கத்தை கூட்டுறவு இயக்கத்தின் தேவைகளின்படி மீளாய்வு செய்து, இலங்கை தகைமைக் கட்டமைப்பு (SLQF) அந்தஸ்தைப் பெறுதல் மற்றும், SLQF-4 மட்டத்தில் உயர் டிப்ளோமா கற்கைநெறியை ஆரம்பித்தல்.
iii. கூட்டுறவு விடயத் துறையில் அறிவுக் கேந்திரமாக விளங்கும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன நூலகத்தின் தானியங்கிமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்.
iv. இலங்கையில் செயற்பாட்டில் உள்ள சகல கூட்டுறவு சங்கங்களையும் உள்ளடக்கிய மற்றும் அந்த சங்கங்களின் தரவுகளைக் கொண்ட ஒரு டிஜிட்டல் கூட்டுறவு சங்கங்களின் தரவுத்தளத்தை நிறுவி பராமரித்தல்.
v. இலங்கையில் தற்போதுள்ள உற்பத்திப் பல் சேவைக் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்தவும், அவற்றை ஏற்றுமதி நிலைக்கு மேம்படுத்துதற்காக சோதனை ஆய்வொன்றை நடத்துதல்.
vi. கூட்டுறவு சங்கங்கள் அடங்கலான கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்புடைய சட்ட, நிதி, கணக்கியல் அல்லது பிற தொடர்புடைய விடயப் பிரிவுகளை உள்ளடக்கியவாறு புதிய வெட்டுமுகம் ஒன்றைக்கொண்டு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால கற்கைகளைத் தொடங்குவதன் மூலமும், கூட்டுறவு வணிகத்தையும் அதன் சேவைகளைப் பெறும் வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலான சகல

கூட்டுறவு சேவை பெறுநர்களையும் பாதுகாப்பதற்கும், கூட்டுறவு வணிகத்தை ஒரு புதிய வெட்டுமுகத்தின் ஊடாகப் பராமரிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் 2025 ஆம் ஆண்டு முதல் பொருளாதார பாதுகாப்புடன் கூடிய ஒரு நிறுவனமாக செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

vii. கூட்டுறவு பற்றிய அறிவை பாடசாலைப் பாடத்திட்டத்தில் இணைத்து, ஆசிரியர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

viii. கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தை பல்கலைக்கழக மட்டத்திற்கு உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்

### 4.14. வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (நானாவித) சட்டபூர்வ கூட்டுத்தாபனம்

i. சந்தை விலை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோகத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் அவசியம் என்று கருதும் போதெல்லாம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகித்தல். அதன்படி, 2025 ஆம் ஆண்டில் சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரிசி மற்றும் உப்பு இறக்குமதி செய்தல்.

ii. அரசாங்கத்தின் டிஜிட்டல் கொள்கைக்கு இணங்க ஸ்மார்ட் பலகைகள் மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்ப உற்பத்திகளின் விளம்பரத்தை விரிவுபடுத்துதல்.

iii. மூலதனத்திற்காக அரசாங்க நிதியைப் பயன்படுத்தி காணி ஒன்றைக் கொள்வனவு செய்து வெடிபொருள் களஞ்சியம் ஒன்றை நிர்மாணித்தல்.

iv. புதிய நிறுவன வள திட்டமிடல் (ERP) முறைமையொன்றை செயல்படுத்துதல்.

v. சுற்றாடல் பகுதியில் உள்ள ஏனைய வளாகங்களைப் போலவே, நவம் மாவத்தைக் காட்சிக்கூடத்தையும் புதுப்பித்து நவீனமயமாக்கி, வாடிக்கையாளர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான நிலையமாக மாற்றுதல்.

vi. கூட்டுத்தாபனத்தின் காட்சிக்கூட வலையமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் இரண்டு புதிய காட்சிக்கூடங்களைத் திறந்து வைத்தல்.

vii. தற்போதுள்ள உற்பத்தித் துறைக்கு புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கூடுதல் விற்பனையில் மேலதிக வளர்ச்சியை அடைதல்.

viii. நுகர்வோர் தளத்தை மேலும் அரச துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களை உள்ளடக்கியதாக விரிவுபடுத்துவதன் மூலம் வருவாயை அதிகரித்தல்.

ix. நிறுவனத்தின் எதிர்காலக் கண்ணோட்டம்
தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தல் மற்றும், "வளமான நாடு, அழகான வாழ்வு" என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு, அதன் பலங்களை இயன்றவரை முழுமையாகப் பயன்படுத்தி, புதிய உற்பத்தி வகைகள் மற்றும் சந்தைகளின் பரம்பலை தொடர்ந்து பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.15. உணவு ஆணையாளர் திணைக்களம்

i. உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தம்புள்ள வெப்பநிலைக் கட்டுப்பாட்டுக் களஞ்சியசாலையை செயற்படுநிலைக்கு மாற்றுதல்.

ii. உணவுத் திணைக்களத்துக்குச் சொந்தமான களஞ்சியங்களை நவீனமயமாக்கும் திட்டத்தை செயற்படுத்துதல்.

iii. உணவுத் திணைக்களத்துக்குச் சொந்தமான களஞ்சியங்களின் கூரையில் சூரிய வெப்பம் மூலம் மின்சாரம் தயாரிப்பதன் ஊடாக மேலதிக வருமானத்தை ஈட்டுதற்குத் திட்டமிடுதல்.

### 4.16. கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம்

i. "சமாகம் மதுர" என்ற கட்டிடத்தின் 4 மாடிகளைப் புதுப்பித்தல் மற்றும் தேவையான அபிவிருத்தி நடவடிக்கைக்காக ரூ. 150 மில்லியன் செலவிடுதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ii. வாகன பழுதுபார்ப்பு, அலுவலக உபகரணங்கள் மற்றும் நிறுவன நடவடிக்கை மேம்பாட்டிற்காக ரூ. 32 மில்லியன் தொகையினை நிறுவன நிதிகளிலிருந்து முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.




ලංකාවේ ඉන්දියානු මහ කොමසාරිස්වරයා හමුවීම

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ. சந்தோஸ் ஜாவுடனான சந்திப்பு

Courtesy call by His Excellency Santosh Jha, High Commissioner of India for Sri Lanka.




"Voyage Sri Lanka 2024" සමුළුව කොළඹ කිංග්ස්බරි හෝටලයේදී

"Voyage Sri Lanka 2024" மாநாடு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில்

"Voyage Sri Lanka 2024" conference at the Kingsbury Hotel, Colombo




මහපොළ අරමුදල පිළිබඳ සාකච්ඡාව

மகாபொல நிதியம் பற்றிய கலந்துரையாடல்

Discussion on the Mahapola Fund





සහල් ආනයනකරුවන් සමඟ පැවති සාකච්ඡාව

அரிசி இறக்குமதியாளர்களுடனான கலந்துரையாடல்

Discussion with rice importers





ලංකාවේ කැනේඩියානු මහ කොමසාරිස්වරයා හමුවීම

இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் கௌரவ. எரிக் வோல்ஸ் உடனான சந்திப்பு

Courtesy call by His Excellency Eric Walsh, High Commissioner of Canada for Sri Lanka.





ලංකාවේ යුරෝපා සංගමයේ තානාපතිනිය හමුවීම

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய ஸ்தானிகர் கௌரவ. கார்மன் மொரினோவுடனான சந்திப்பு

Courtesy call by Her Excellency Carmen Moreno, Ambassador of the European Union for Sri Lanka

ශ්‍රී ලංකාවේ නවසීලන්ත මහ කොමසාරිස්වරයා හමුවීම

இலங்கைக்கான நியுசிலாந்து உயர் ஸ்தானிகர் கௌரவ. டேவிட் பைன் உடனான சந்திப்பு

Courtesy call by His Excellency Devid Pine, High Commissioner of New Zealand for Sri Lanka.

වෙළඳපොළේ පැවති සහල් හිඟය පිළිබඳව සහල් මෝල් හිමියන් සමග කළ සාකච්ඡාව

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாடு பற்றி அரிசி ஆலை உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்

Discussion with rice mill owners regarding the ongoing rice shortage in the market

ශ්‍රී ලංකාවේ එක්සත් අරාබි එමීර් රාජ්‍යයේ තානාපතිවරයා හමුවීම

இலங்கைக்கான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உயர் ஸ்தானிகர் கௌரவ. கலெட் நாசர் உடனான சந்திப்பு

Courtesy call by His Excellency Khaled Nasser ALAmeri, Ambassador of the United Arab Emirates for Sri Lanka.




වසර ගණනාවක් වසා තිබූ හිඟුරක්ගොඩ සතොස විමෝල් ගබඩා සංකීර්ණය නිරීක්ෂණය

வருடக்கணக்காக மூடப்படிருந்த ஹிங்குராங்கொட சதொச அரிசி ஆலை மற்றும் களஞ்சியத் தொகுதியைப் பார்வையிடல்

Inspection of the abandoned Hingurakgoda Sathosa rice mill & the warehouse complex




මැදිරිගිරියේ ධාන්‍ය සුරැකුම් මධ්‍යස්ථානය නිරීක්ෂණය

மெதிரிகிரிய தானியக் களஞ்சிய மத்திய நிலையத்தைப் பார்வையிடல்

Inspection of the Medirigiriya Grain Storage Center




දඹුල්ල ආර්ථික මධ්‍යස්ථානයේ ශීතාගාරය නිරීක්ෂණය

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய குளிர்பதனக் களஞ்சிய வசதியை ஆய்வு செய்தல்

Inspection of the cold storage facility at the Dambulla Economic Centre




අමාත්‍යාංශයේ ආයතන ප්‍රධානීන් සමඟ පැවති සාකච්ඡාව

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தலைவர்களுனான கலந்துரையாடல்

Discussion with heads of institutions under the Ministry




ශ්‍රී ලංකාවේ ඉරාන තානාපතිවරයා හමුවීම

இலங்கைக்கான ஈரானியத் தூதுவருடனான சந்திப்பு

Courtesy call by His Excellency Dr.Alireza Delkhosh, Iranian Ambassador for Sri Lanka.




දේශීය ටින් මාළු නිෂ්පාදකයින් සමග කල සාකච්ඡාව

உள்நாட்டு ரின்மீன் உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல்

Discussion with local canned fish producers




අතහැර දමා තිබූ ගල්ගමුවේ වී ගබඩා සංකීර්ණය නිරීක්ෂණය

கைவிடப்பட்ட கல்கமுவ அரிசி ஆலை மற்றும் களஞ்சியத் தொகுதியை ஆய்வு செய்தல்

Inspection of the abandoned Galgamuwa rice mill & the warehouse complex




දේශීය ටයර් නිෂ්පාදකයින් සමග කළ සාකච්ඡාව

ரயர் உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல்

Discussion with local tire manufacturers




අතහැර දමා ඇති ඔයාමඩුව රජයේ වී ගබඩා නිරීක්ෂණය

கைவிடப்பட்ட ஓயமடுவ அரிசி ஆலை மற்றும் களஞ்சியத் தொகுதியை ஆய்வு செய்தல்

Inspection of the abandoned Oyamada Government rice mill & the Warehouse

පිඟන් සංස්ථාවට අයත් අතහැර දමා ඇති ඇලයාපත්තුව උළු කර්මාන්ත ශාලාව නිරීක්ෂණය

கைவிடப்பட்ட சிலோன் செரமிக்ஸ் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எலயாபத்துவ கூரை ஓட்டுத் தொழிற்சாலையைப் பார்வையிடல்

Inspection of the abandoned Elayapaththuwa roof tile factory owned by the Ceylon Ceramics Corporation

තඹුත්තේගම ආර්ථික මධ්‍යස්ථානය නිරීක්ෂණ චාරිකාව

தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்துக்கு விஜயம் செய்தல்

Visiting to the Thambuttegama Economic Centre

වසා දමා ඇති මැදවච්චිය ආර්ථික මධ්‍යස්ථානය නිරීක්ෂණ චාරිකාව

கைவிடப்பட்ட மதவாச்சி பொருளாதார மத்திய நிலையத்துக்கு விஜயம் செய்தல்

Visiting to the abandoned Medawachchiya Economic Centre




2025 අයවැය යෝජනාවලිය පිළිබඳව අමාත්‍යාංශයට අදාළ ආයතන සමඟ කළ සාකච්ඡාව

2025 வரவுசெலவுத் திட்டப் பிரேரணை தொடர்பில் அமைச்சுக்குரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்

Discussion with relevant institutions of the Ministry regarding the 2025 Budget proposal




පාරිභෝගික සේවා අධිකාරියේ නිලධාරීන් සමග කළ සාකච්ඡාව

நுகர்வோர் விவகார அதிகாரசபை அலுவலர்களுடன் கலந்துரையாடல்

Discussion with officers of the Consumer Affairs Authority




සතොසට අයත් කොළඹ ඩී ආර් විජේවර්ධන මාවතේ ගොඩනැගිලි නිරීක්ෂණය

சதொசவிற்குச் சொந்தமான கொழும்பு டி.ஆர். விஜேவர்தன மாவத்தையிலுள்ள சொத்துகளை பார்வையிடல்

Inspection of properties on D.R.Wijewardena Mawatha,Colombo, owned by Sathosa

ශ්‍රී ලංකාවේ පාකිස්තාන මහ කොමසාරිස්වරයා හමුවීම

**இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகருடனான சந்திப்பு**

Courtesy call by His Excellency Major General(Rtd) Faheem UI Aziz, Pakistan High Commissioner for Sri Lanka.

වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමූපකාර සංවර්ධන අමාත්‍යාංශය, අංක 492, ආර්.ඒ. ද මැල් මාවත , කොළඹ 03.
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, இல 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development, No 492, R.A. De Mel Mawatha, Colombo 03.